961

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

"வக்கீல்"

1—2. 1-2

961
2-ம்

இந்த இதழில்

ஷாப் சட்டம்

விற்பனைவரி விமர்சனம்

குதிரைப் பந்தய
சூதாட்ட ஒழிப்பு

பல தாரத்தடை
விவாக ரத்து

மற்ற புதிய சட்டங்கள்

கண்ட்ரோல்-லைசென்சு
விலை சம்பந்தப்பட்ட
விஷயங்கள்

விபரங்கள் உள்ளே
பார்க்கவும்

பொது-மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

1—2

தமிழ் மாதப் பத்திரிகை

மே 1949

1708

வருட சந்தா ரூ. 3 தனிப்பிரதி அணா 4

தபால்பெட்டி நெ. 26, கும்பகோணம் S. I. Ry.

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு.

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ V. தியாகராஜன், B. A., B. L.,

,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,

,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,

,, T. S. வெங்கடருமன், B. A., B. L.,

,, R. கோபாலசாமி, B. A., B. L.,

,, V. S. விஜயருகவாச்சாரி, B. A., B. L.,

"வக்கீல்"

(சந்தா விபரம்)

வருட சந்தா	...	...	ரூ. 3—0—0
தனிப் பிரதி	...	...	0—4—0
வெளி நாடு வருட சந்தா	...	...	6—0—0

"வக்கீல்" காரியாலயம்

தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம் (S. I.)

ஓர் நற்செய்தி

கும்பகோணம் டவுனிலும் சுற்று வட்டாரத்திலும் பங்களாக்கள், வீடுகள், கடைகள், கட்டிடங்கள், காலி மனைகள், மில்கள், முதலியவற்றை நீங்கள் வாங்கவும் விற்கவும் எனக்கு எழுதுங்கள்.

R. B. பாலகிருஷ்ண செட்டியார்,
மர்ச்செண்ட் & ஏஜண்டு,
ஸ்ரீ சக்கரபாணி மேல சந்நதி,
கும்பகோணம்.

குடந்தை வரும் நேயர்களுக்கு

தகுந்த சௌகரியங்கள் நிறைந்தது

ருசிகரமான சாப்பாடும் சிற்றுண்டியும்

கணபதி விலாஸ்

காபி ஹோட்டல்

போர்டிங் & லாட்ஜிங்

ஸ்ரீசக்கிரபாணிசுவாமி தெற்குவிதி,
கும்பகோணம்.
(கடைத்தெருவிற்கு சமீபம் உள்ளது)

G. கணேசய்யர்,
புரோப்ரைட்டர்.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 1 மே '49 இதழ் 2

பொருள் அடக்கம்

எங்கள் கடமை 3

ஷாப் சட்டம் 5

சென்னை ஹிந்து பலதாரத்தடை விவாகரத்துச் சட்டம் 10

ஜீவனும்ச சட்ட மாறுதல் 11

குதிரைப் பந்தய (சூதாட்ட) ஒழிப்பு சட்டம் 12

வீண் வியாஜ்ய தடைச் சட்டம் 13

மாகாண சர்க்கார் நேரடியாக பஸ்-சர்வீஸ் நடத்த சட்டம் 13

மறுபடியும் விவசாயி கடன் நிவாரணச் சட்டத்திருத்தம் 14

பொதுப் புத்தக சாலைச் சட்டம் 14

விற்பனை வரி 15

கண்ட்ரோல்-லைசென்சு-ரேஷன்-விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள் 19

N. கோபால்தாஸ் & கோ.,

வைரம், தங்க நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள்

சின்னகடைத்தெரு, திருச்சி.

நெ. 121, பெரியதெரு, கும்பகோணம்.

நல்ல சாமான்கள்! **நியாயமான விலை!!**

- வைரங்களில் பழைய வெட்டுமுதல் புது வெட்டுவரையில் எல்லா ரகங்களும் ஒவ்வொருவருடைய விருப்பத்திற்கேற்றவாறு கிடைக்கும்.
- ஒவ்வொரு வைர நகை வேலைப்பாடுகளும் கிராக்கிகளுக்கு பூரண திருப்தி அளிக்குமாறு எங்கள் நேர்பார்வையிலேயே தயாரிக்கப்படுகின்றன. இத்துடன்கூட கிராக்கிகளின் ஆர்டரின்பேரில் தங்க நகைகளும் செய்துகொடுக்கிறோம்.
- சிமை கட்டி வெள்ளியில் செய்யப்பட்ட வெள்ளிப் பாத்திரங்கள் எல்லா மாதிரிகளிலும் எப்போதும் தயாராக இருக்கின்றன. கிராக்கிகளின் ஆர்டர்பேரிலும் வெள்ளிப் பாத்திரங்கள் செய்துகொடுக்கிறோம்.

தங்கள் மேலான ஆதரவை எப்போதும் கோருகிறோம்.

187685

600 038

டி. டி. மிஸ்கி பெருங்காயம்

மணம் குணம் ருசி மிகுந்தது.



ஆயுள் ஆரோக்கியம் அளிக்கவல்லது.

ரிஷீட் ஜெம்ஷேட் ஸன்ஸ் & Co.,

தலைமை ஆபீஸ் : பம்பாய்

o o o

கிளைகள் : மதராஸ், மதுரை, கும்பகோணம்.

o o o

ஸ்ரீ சக்கிரபாணி சந்நதி, கும்பகோணம்

"வக்கீல்"

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 1 மே 1949 இதழ் 2

எங்கள் கடமை

"வக்கீல்" பத்திரிகை தமிழகத்துப் பொதுமக்களின் ஒரு நீண்டநாள் குறையைத் தீர்ப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் அடங்கிய விஷயங்கள் சட்ட சம்பந்தப்பட்டவைகளாயிற்றே என்றும் இவ்விஷயங்கள் யாவும் பொதுமக்களின் பெரும்பான்மையோருக்கு மிகவும் உபயோகமுள்ளதாக இருந்தாலும் அதைப் படிக்க அவர்களுக்கு ஊக்கமும் அவகாசமும் இருக்குமா என்றும் அவரவர்கள் தங்கள் தங்கள் தொழில் சம்பந்தமாயும் சொத்துக்கள் சம்பந்தமாயும் உள்ள சாதாரண சட்ட விஷயங்களைக்கூட ஏதாவது ஒரு அவசியம் நேர்ந்தபொழுது தெரிந்தவர்களைக் கேட்டுக்கொண்டால் போதுமென்ற மனப்பான்மை இருப்பது சகஜம்தானே என்றும் எங்களுக்கிருந்த சந்தேகங்கள் எல்லாம் "வக்கீல்" முதல் இதழ் வெளியானதும் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தன. பொதுமக்கள் இத்தொண்டை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டனர். "வக்கீல்" முதல் பிரதியை வாசித்த பல அன்பர்கள் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அவை எல்லாவற்றையும் பிரசுரம் செய்ய இடம் இல்லை. உசிலம்பட்டியிலிருந்து ஒரு நண்பர் "நம் நாட்டில் தற்போது இம்மாதிரி அறிவை வளர்க்கக்கூடிய பத்திரிகைதான் தேவையாக இருக்கிறது" என்று எழுதி இருக்கிறார். ஈரோடு அன்பர் "நெடுங்காலமாக தமிழ்நாட்டிற்கு இத்தகைய சட்ட சஞ்சிகை ஒன்று தமிழில் தேவையாயிருந்தது. அத்தேவையை தங்கள் முயர்ச்சி பூர்த்திசெய்துவிட்டது. தங்கள் முயர்ச்சிக்கு மேன்மேலும் வெற்றியும் ஆதரவும் கிடைக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்" என்றும், திருநெல்வேலி நண்பர் "பெயருக்கேற்றபடி பொதுமக்களுக்கு "வக்கீலா"கவே தங்கள் பத்திரிகை வழங்கவேண்டும்" என்றும் ஆசிகூறி இருக்கிறார்கள். இக்கடிதங்களுக்கும் இதுபோல் எங்களுக்குக் கிடைத்த பல கடிதங்களுக்கும் எங்கள் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

"வக்கீல்" பத்திரிகையின் நோக்கம் என்ன? கடமை என்ன? சமீபத்தில் நடந்த சென்னை அட்வகேட் சங்க வைர விழாவில் பேசுகையில் இந்திய பிரதம நீதிபதி ஸர். ஹிராலால் ஜே. கனியா அவர்கள் "வக்கீலி"ன் கடமையைப்பற்றி பேசும் பொழுது "வக்கீல் தொழிலை மக்களுக்குத் தொண்டு செய்யவும், மக்களின் பிரஜா உரிமையைக் காக்கவும் கிடைத்துள்ள ஒரு சந்தர்ப்பமாகக் கருதவேண்டும். பயத்தை அறவே விட்டொழித்து வக்கீல்கள் தங்கள் கடமையை நிறைவேற்றி தேச சுதந்திரத்தை உறுதிப்படுத்தவேண்டும்" என்ற உயரிய கருத்தை வெளியிட்டார். இந்த

லட்சியங்களை வைத்துக் கொண்டே "வக்கீல்" பத்திரிகையும் தொண்டுபுரியும்.

"வக்கீல்" பத்திரிகையில் அடங்கிய சட்ட விஷயங்கள் யாவும் சர்வகலாசாலையில் சட்டப் பட்டங்கள் பெற்று அனுபவம் வாய்ந்த சட்ட அறிஞர்களாலேயே எழுதப் பட்டும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும் வெளியிடப்படுகிறது.

"வக்கீல்" பத்திரிகையின் ஏப்ரல் இதழைப் படித்த பல நண்பர்கள் இப்பத்திரிகை மாதம் இரு முறையாகவோ வாரம் ஒரு முறையாகவோ பிரசுரிக்கப்பட்டால் உபயோகமாக இருக்குமென்றும் அபிப்பிராயப் படுகிறார்கள். அதை நன்கு ஆலோசித்து கூடிய சீக்கிரம் ஒரு முடிவிற்கு வருவோம்.

ஆனால் அப்படிச் செய்யுமுன் இப்பத்திரிகையில் இன்னும் பல அம்சங்களும் பகுதிகளும் நிரந்தரமாய் ஒவ்வொரு இதழிலும் வெளி வரும்படி செய்வதாய் தீர்மானித்திருக்கிறோம். உதாரணமாய் ஜூன் இதழிலிருந்து "கேள்வி-பதில்" என்ற பகுதி சேர்க்கப்படும். இதில் நமது பத்திரிகையின் வருட சந்தாதாரர்களாக சேருபவர்களுடைய சட்டசம்பந்தமான கேள்விகளுக்கு (இடம் இருக்கும்வரை) பதில் கொடுக்கப்படும். இந்த இதழில் ஷாப் சட்டமும் விற்பனை வரிச்சட்டமும் ஆரம்பிக்கப்பட்டு இவை தொடர்ச்சியாய் வெளி வரும். அதில் வருட சந்தாதாரர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும் கேட்கலாம்.

கல்யாண

பட்டு நூல்

ஜவுளிகளுக்கு

ராதா ஸில்க் எம்போரியம்

119, பெரியதெரு :: கும்பகோணம்.

போன் நெ. 83

Tel. "ROYAL"

உயர்ந்த பிளேசர் பட்டு உத்திரவாதமுள்ள ஜரிகை, பலரக கலர்கள்-உடை நயம் நாகரீக பல பார்டர் தினுசுகள் 6, 7, 8, 9, கெஜங்களில் ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ஒரே விலை விற்பனை

K. T. A. K. L.

பாலகிருஷ்ணையர்

பட்டு ஜவுளி வியாபாரம்

8, சௌராஷ்டிர பெரியதெரு,

கும்பகோணம்.

ஷாப் சட்டம்

இச்சட்டத்தின் எல்லா முக்கிய அம்சங்களையும் கடைகள் ஹோட்டல்கள் உள்பட எல்லாவிதமான ஸ்தாபனங்களில் சம்பந்தப்பட்ட முதலாளிகளும் சிப்பந்திகளும் தெரிந்துகொள்ளும்பொருட்டு இவ்விஷயத்தை கேள்வி-பதில் என்ற நடையில் எழுதியிருக்கிறோம். இது தொடர்ச்சியாய் வரும்

கேள்வி: ஷாப் சட்டம் எதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது?

பதில்: நாம் சுதந்திர நாட்டில் வசித்து வருகிறோம் என்பதை உணர்த்தும் பல சட்டங்களில் இது ஒன்று. இம்மாகாணத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான கடைகள், ஹோட்டல்கள், சினிமாக் கொட்டகைகள் முதலிய ஸ்தாபனங்களில் சம்பளம் பெற்று வேலைசெய்து வரும் லக்ஷக்கணக்கான சிப்பந்திகளின் நன்மைக்காகவே இச்சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இச்சட்டம் சிப்பந்திகளுக்கு சரீர ஓய்வையும் மன நிம்மதியையும் கொடுக்கின்றது. சிப்பந்திகளிடம் ஒரு அளவுக்கு மிஞ்சி வேலை வாங்கமுடியாது. அவர்களுக்கு கட்டாயமான ஓய்வு நாட்கள் உண்டு. அவர்கள் சம்பளம் சரிவரவும் தாமதமின்றியும் கிடைத்து விடும். அவர்கள் வேலை செய்யவேண்டிய இடங்கள் சுகாதார விதிகளுக்கு ஒத்ததாக இருக்கவேண்டும். இதுபோல் சிப்பந்திகள் பல நன்மைகளை அடைகிறார்கள்.

கேள்வி: ஷாப்சட்டம் கிராமபிரதேசங்களுக்கும் அமுலுக்கு வந்திருக்கிறதா?

பதில்: இப்பொழுது இல்லை. முதலில் சென்னைப்பட்டிணத்திலும் முனிசிபல்டவுன்களிலும் பெரிய பஞ்சாயத்துக்களிலும்தான் அமுலுக்கு வந்திருக்கிறது. ஆனால் இனி மேல் சர்க்கார் கிராம பிரதேசங்களிலும் செலாவணியாக்கலாம். [1]

கேள்வி: இச்சட்டம் "ஸ்தாபனங்களில்" வேலைசெய்யும் சிப்பந்திகளின் நன்மைக்காக என்றீர்களே. ஸ்தாபனம் என்றால் என்ன?

பதில்: "ஸ்தாபனம் என்றால் கடை, வியாபார ஸ்தாபனம் (கம்பெனி ஆபீஸ் போன்றவை) காபிஹோட்டல், சாப்பாடு ஹோட்டல், சினிமா, டிராமா கொட்டகை இவைகளுக்குப் பொருந்தும். மேலும் இச்சட்டத்தை அனுஷ்டிப்பதற்காக இதில் அடங்காத எதையும் ஸ்தாபனம் என்று சர்க்கார் அறிவிக்கலாம். [2 (6)]

கேள்வி: எல்லா ஸ்தாபனங்களிலும் வேலை செய்வோருக்கும் இச்சட்டம் ஒரே மாதிரிதானே?

பதில்: பெரும்பாலான விதிகள் எல்லா ஸ்தாபனங்களுக்கும் பொருந்துமென்றாலும் இரண்டொரு விஷயங்களில் கடைகளுக்கும் மற்ற ஸ்தாபனங்களுக்கும் சட்டம் வித்தியாசமாக இருக்கிறது. உதாரணமாக கடைகள் வாரத்தில் ஒருநாள் கட்டாயமாக மூடப்படவேண்டும்; மற்ற ஸ்தாபனங்கள் கட்டாயமாய் மூடப்பட வேண்டியதில்லை. ஆனால் சட்டத்தின் மற்ற ஷரத்துக்களை உத்தேசித்து இவைகளையும் வாரத்தில் ஒரு நாள் மூடுவது நல்லது.

கேள்வி: காபிகிளப், சாப்பாடு ஹோட்டல் இவைகள் கடைகளா?

பதில்: இல்லை. [2 (16)]

கேள்வி: எல்லா ஸ்தாபனங்களிலும் உள்ள சிப்பந்திகளுக்கும் இச்சட்டம் உண்டா?

பதில்: இல்லை. சர்க்கார், முனிசிபாலிடி முதலிய ஸ்தாபனங்கள், ரிசர்வ் பாங்கி, ரயில்வே, கண்டோன்மெண்ட் இவை

இதுபோல் [ ] பிராக்கெட்டுக்குள் இருக்கும் எண் சட்டத்தின் செக்ஷனைக் குறிக்கும்

களுடைய ஸ்தாபனங்களுக்கு இச்சட்டம் கிடையாது. மேலும் சுரங்கங்கள், மண் எண்ணை வயல்கள், இவைகளுக்குச் சொந்தமான ஸ்தாபனங்களுக்கும், தாற்காலிகமாய் 15 நாட்களுக்கு மேற்படாமல் ஒரு இடத்தில் சந்தை அல்லது திருவிழா நடந்தால் அந்த இடங்களில் உள்ள கடை ஸ்தாபனங்களுக்கும், இச்சட்டத்தைப் போல் வேறு பிரத்தியேகமான சட்டத்திற்கு உட்பட்ட ஸ்தாபனங்களுக்கும் இச்சட்டம் கிடையாது. [4 (1) c, d, e, f]

கேள்வி: ஒரு ஸ்தாபனத்தில் வேலை பார்க்கும் எல்லா சிப்பந்திகளுக்கும் இச்சட்டம் அனுஷ்டிக்கப்படுமா?

பதில்: இல்லை. ஒரு ஸ்தாபனத்தில் (மானேஜர், ஏஜண்டு போன்ற) நிர்வாகம் செய்யும் அந்தஸ்திலுள்ளவர்களுக்கு இச்சட்டம் இல்லை. [4 (a)] இப்படி 4-வது செக்ஷனில் வியக்தமாக கண்டிருந்தபோதிலும் 2(5) செக்ஷனில் முதலாளி அல்லது வேலை கொடுப்பவர் என்றால் மானேஜரும் ஏஜண்டும் அதில் சேர்ந்தவர்தான் என்று இருப்பது ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது. உதாரணமாக ஒரு ஸ்தாபனத்தின் மனேஜர் சிப்பந்தியிடம் ஒருநாள் 12 மணி நேரம் வேலை வாங்கினால் அவரும் முதலாளி என்ற முறையில் இச்சட்டப்படி குற்றம் செய்பவராவர். ஆனால் இச்சட்டம் அவருக்கு கிடையாது என்றால் அவர் எப்படி குற்றம் செய்பவர் ஆவார்? மானேஜரைத் தவிர சுற்றுப் பிரயாணம் செய்யும் சிப்பந்திகளுக்கும், பேரம் பிடிக்கும் சிப்பந்திகளுக்கும் (கமிஷன் ஏஜண்டு) காவல் காப்பவர்களுக்கும் இச்சட்டம் கிடையாது. மற்றவர்கள் எல்லோருக்கும் உண்டு. [4 (1) a, b]

கேள்வி: இச் சட்டத்திற்குட்பட்ட எல்லா ஸ்தாபனங்களுக்கும் எல்லா விதிகளும் அனுஷ்டிக்கப்படுமா?

பதில்: இதிலும் சில விதிவிலக்குகள் இருக்கின்றன. தினந்தோறும் ஸ்தாபனங்கள் எந்த நேரத்திற்குப் பிறகு திறக்கப்பட வேண்டும், எந்தநேரத்திற்குப்பிறகு திறந்து வைத்திருக்கக்கூடாது என்று நிர்ணயம் செய்ய சர்க்காருக்கு அதிகாரம் இருந்தாலும் சில ஸ்தாபனங்களுக்கு அந்த விதி கிடையாது. அதாவது ஆஸ்பத்திரிகள், வைத்திய சாலைகள், சில மருந்துக்கடைகள், சங்கங்கள், வாசத்திற்கு வசதி உள்ள ஹோட்டல்கள், ஸ்கூல் காலேஜ் ஹாஸ்டல்கள் இவைகளுக்கு இவ்விதி கிடையாது. [4 (2)] மேலும் மாகாண சர்க்கார் அவ்வப்பொழுது ஊர்களுக்கும், சமயத்திற்கும் சந்தர்ப்பங்களுக்கும் தக்கபடி குறிப்பிட்ட ஸ்தாபனங்களை குறிப்பிட்ட விதிகளிலிருந்து யுக்தப்படி விதிவிலக்கு செய்யலாம். அப்படி உத்சவ காலங்களிலும் பொருட்காட்சி நடக்கும் இடங்களிலும் சமயத்திற்குத் தக்கபடி சர்க்கார் செய்யும் உத்திரவுகளை கெஜட்டில் விளம்பரம் செய்வார்கள். [6]

கேள்வி: தினந்தோறும் கடை முதலிய ஸ்தாபனங்கள் எப்பொழுது திறப்பது, எப்பொழுது மூடுவது என்ற நிபந்தனை உண்டா?

பதில்: இது விஷயமாய் சர்க்காருக்கு எந்த வகைப்பட்ட ஸ்தாபனங்கள் தினம் எந்த மணிக்கு முன் திறக்கக்கூடாது, எந்த மணிக்குப்பிறகு திறந்து வைத்திருக்கக் கூடாதென்று நிர்ணயம் செய்ய அதிகாரம் உண்டு. அப்படி நிர்ணயம் செய்தபிறகு அதற்கு மாறாக திறந்து மூடக்கூடாது. சர்க்கார் நிர்ணயம் செய்யுமுன் இதைக்கட்டுப்படுத்த ஒன்றும் சட்டமில்லை. இது கடைகள் ஹோட்டல்கள் உள்பட எல்லாவிதமான ஸ்தாபனங்களுக்கும் பொருந்தும். [7-13]

கேள்வி: எல்லா ஸ்தாபனங்களும் வாரத்தில் ஒருநாள் மூடப்படவேண்டுமா?

பதில்: சட்டப்படி கடைகள் மட்டில் வாரத்தில் ஒருநாள் கட்டாயமாக மூடி இருக்கவேண்டும். மற்ற ஸ்தாபனங்களும் ஹோட்டல்களும் வாரத்தில் ஒருநாள் மூடி இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனால் வேறு விதிகளை உத்தேசித்து அப்படி இவர்களும் மூடிவிடுவது உசிதம். [11(1)]

கேள்வி: கடைகள் கட்டாயமாய் மூடி இருக்கவேண்டியது வாரத்தில் ஒரேநாள் தானா? அதிகமா?

பதில்: இப்பொழுது ஒருநாள் மூடினால் போதும். பிந்தி சர்க்கார் இன்னும் அரைநாள் அதிகமாக மூடவேண்டுமென்று உத்திரவு செய்யலாம். [11 (3)]

கேள்வி: கடைகள் மட்டுந்தானே வாரத்தில் கட்டாயமாய் ஒரு தினம் மூடவேண்டும்? ஹோட்டல், காபிகிளப், சினிமாக்கொட்டகை, முதலியவைகளை ஒருநாள் கூட மூடாமல் நடத்த என்ன தடை?

பதில்: சட்டப்படி ஒன்றும் தடை இல்லை. ஆனால் எவ்விதமான ஸ்தாபனங்களிலும் (அதாவது கடை, ஹோட்டல், காபிகிளப், சினிமா கொட்டகை உள்பட எல்லா ஸ்தாபனங்களிலும்) வேலைசெய்யும் ஒவ்வொரு சிப்பந்திக்கும் வாரம் ஒருநாள் கட்டாயமான விடுமுறை கொடுத்தே தீரவேண்டும். இதற்குமேலும் இன்னும் அதிகப்படியாக ஒரு அரைநாள் விடுமுறை விடவேண்டுமென்றும் சர்க்கார்சொல்லலாம். அப்படி சிப்பந்திகளுக்கு ஒருநாள் விடுமுறை விட்டுவிட்டு வேறு சிப்பந்திகளைக்கொண்டு (கடைகளை தவிர) மற்ற ஸ்தாபனங்களை நடத்தலாம். அப்படி நடத்துவதில் ஏற்படும் பல அசௌகரியங்களை உத்தேசித்து குறிப்பிட்ட ஒரு தினத்தை விடுமுறையாக விடுவதே நலம்; ஆனால் கட்டாயமல்ல. இப்படி விடுமுறை கொடுக்காவிட்டால் குற்றம். [16-45]

கேள்வி: அப்படியானால் கடையில் வேலைசெய்யும் ஒரு சிப்பந்திக்கு ஒரு வாரத்தில் கடை மூடப்படும் ஒரு தினத்தில் வேலை கிடையாது; தவிர விடுமுறை ஒருதினம் ஆக இரண்டு நாட்கள் விடுமுறையா?

பதில்: இல்லை. கடைமூடப்படும் ஒரு தினம்தான் சிப்பந்தியின் விடுமுறை நாளாகும். [11 (2)]

கேள்வி: கடையை ஒவ்வொரு வாரமும் எந்தக் கிழமை மூடவேண்டும்.

பதில்: கடைக்காரர் இஷ்டப்பட்ட தினத்தில் மூடலாம். ஆனால் அப்படி மூடப்போகும் தினத்தை கடைக்காரர் முன்பே தீர்மானம் செய்து கடையில் எல்லோருக்கும் தெரியக்கூடிய இடத்தில் எப்பொழுதும் இருக்கும்படி விளம்பரம் செய்து வைக்கவேண்டும். அதை மூன்று மாதங்களுக்குள் மாற்றக்கூடாது. இப்படி செய்யாவிட்டாலும் குற்றம்தான். [11-45]

கேள்வி: இப்படி கடைகளிலும் ஹோட்டல் முதலிய ஸ்தாபனங்களிலும் வேலை செய்யும் சிப்பந்திக்கு சட்டப்படி விடவேண்டிய விடுமுறை நாட்களுக்கு சம்பளத்தை பிடித்துக் கொள்ளலாமா?

பதில்: கூடாது. சம்பளத்தில் இதற்காக ஏதாவது கம்மி செய்தால் குற்றமாகும். [11 (6)—16 (4)—45]

கேள்வி: தினச் சம்பளம் கொடுக்கும் சிப்பந்திக்கும் இந்த விடுமுறை நாட்களுக்கு சம்பளம் உண்டா?

பதில்: உண்டு.

சிப்பந்திகளின் வயது

கேள்வி: ஒரு ஸ்தாபனத்தில் எந்த வயதுள்ள சிப்பந்தியையும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாமா?

பதில்: முடியாது. 14 வயது பூர்த்தி ஆகாத எவரையும் வேலையில் அமர்த்திக் கொள்ளக்கூடாது. மேலும் அதை அனுமதிக்கவும் கூடாது. அப்படிச் செய்தால் குற்றமாகும். [17—45]

கேள்வி: 14 வயது பூர்த்தியான சிப்பந்திகள் எல்லோருக்கும் ஒரே சட்டம்தானே?

பதில்: அதுவுமில்லை. 14 வயது பூர்த்தி ஆனாலும் 17 வயது பூர்த்தியாகாத பால்யரை வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம். ஆனால் அவரை காலை 6 மணிக்கு முன்னும் மாலை 7 மணிக்கு பிறகும் வேலை செய்யச் சொல்லவும் கூடாது; அனுமதிக்கவும் கூடாது. இவருக்கு தினம் 7 மணிக்கு

மேல் வேலை கூடாது. வாரத்தில் 42 மணி நேரம்தான் வேலைகொடுக்கலாம். 'ஓவர் டயம்' என்ற அதிக நேர வேலையும் செய்ய விடக்கூடாது. [18-19] 15 வயது பூர்த்தி ஆகாதவருக்கு அப்ராதமும் விதிக்கமுடியாது. [35 (5)] இந்த விதிகளை மீறினாலும் குற்றமாகும். [45]

வேலை நேரம்

கேள்வி: 17 வயது பூர்த்தியான சிப்பந்தியை எவ்வளவு நேரம்தான் வேலைசெய்யக் கேட்கலாம் என்ற நிபந்தனை ஏதாவது உண்டா?

பதில்: ஷாப் சட்டமே முக்கியமாய்ச் சிப்பந்திகளின் வேலை நேரத்தை ஒழுங்கு செய்யவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அத்துடன் மற்றும் பல சௌகரியங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 17 வயது பூர்த்தியான சிப்பந்தி சாதாரணமாய் வேலை செய்யக்கூடிய நேரம் தினசரி 8 மணி தான். ஒரு வாரத்தில் 48 மணிக்கு மேல் வேலை கூடாது. இந்த வேலை நேரத்தைப்பற்றிய விதிகளில் முக்கியமாய் கவனிக்கவேண்டியது என்னவென்றால் இந்த 8 மணி நேரத்திற்குமேல் ஒரு சிப்பந்தியை முதலாளி வேலை செய்யச் சொல்லவும் கூடாது; அச் சிப்பந்தி வேலைசெய்கிறேன் என்று இஷ்டப்பட்டால்கூட சாதாரணமாய் முதலாளி அதை அனுமதிக்கக் கூடாது. ஆனால் (ஓவர் டயம் என்ற) அதிக நேர வேலைசெய்வதாய் ஒரு சிப்பந்தி ஒப்புக்கொண்டால், அதை முதலாளி அனுமதிக்கலாம். அப்படி அனுமதிப்பதற்கும் இரண்டு நிபந்தனைகள் உண்டு. இந்த ஓவர் டயம் என்ற அதிக நேர வேலையையும் சேர்த்து தினம் 10 மணி நேரத்திற்கும், வாரம் 54 மணி நேரத்திற்கு மேல் போகாமல் வேலைசெய்ய அனுமதிக்கலாம். இந்த (ஓவர் டயம்) அதிக நேரம் வேலைக்குமட்டில் இரட்டிப்பு சம்பளம் சேர்த்துக் கொடுத்துவிடவேண்டும். இந்த விதிகளை மீறுவது குற்றமாகும். [9, 14, 45]

கேள்வி: ஓவர்டயம் என்ற அதிக நேர வேலைக்கு இரட்டிப்புச் சம்பளம் என்றால் அதை எப்படி கணக்குச் செய்வது?

பதில்: அப்படி அதிக நேர வேலைசெய்யும் சிப்பந்திக்கு ஒரு மாதத்திலோ வாரத்திலோ சாதாரணச் சம்பளம் ஒரு மணிக்கு எவ்வளவு என்று கணக்குச் செய்து அதைப் போல் இரண்டுமடங்கு ஓவர்டயம் வேலைக்குக் கொடுக்கவேண்டும்.

உதாரணம்: ஒரு சிப்பந்தியின் மாதச் சம்பளம் ரூ. 52. அதாவது தினம் 8 மணியாக (வாரவிடுமுறைநாள் போக பாக்கி) அம்மாதம் வேலைநாள் 26-ல் வேலை நேரம் 208 மணி. அந்த 208 மணிக்கு அச்சிப்பந்தியின் சம்பளம் ரூ. 52 என்றால் ஒருமணிக்கு சாதாரணச் சம்பளம் அணா 4 ஆகும். அச்சிப்பந்தி அம்மாதத்தில் வாரம் 6 மணியாக 4 வாரத்திற்கு 24 மணி நேரம் (ஓவர் டயம்) அதிக வேலை செய்திருந்தால் இதற்கு தனியாக மணி 1-க்கு 0—8—0 ஆக ரூ. 12 சேர்த்து அந்த மாதம் ரூ. 64 சம்பளம் கொடுக்கவேண்டும்.

[9-14-31-ரூல் 10]

கேள்வி: எப்படியாவது வேலையில் அமர்த்திக்கொண்டிருந்தால் போதுமென்று ஒரு சிப்பந்தி (ஓவர் டயம்) அதிக நேரவேலை செய்தாலும் இரட்டிப்பு மடங்கு சம்பளம் வேண்டாமென்றும் சாதாரணச் சம்பளம் போதுமென்றும் சம்மதிக்கிறார். அவருக்கும் ஓவர்டயம் வேலைக்கு இரட்டிப்பு மடங்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமா?

பதில்: கட்டாயம் கொடுக்கவேண்டும். இரட்டிப்புச் சம்பளம் கொடுக்காவிட்டால் குற்றமாகும். [9-14-45] இச்சட்டப்படி நன்மைகளை அடையும் ஒரு சிப்பந்தி தனக்கு அந்நன்மைகள் வேண்டாம் என்று சொன்னாலும் சட்டம் கேட்காது. அந்த நன்மைகளை அவருக்கு அளித்தே தீரும். சமூகத்தின் நன்மையைக் கோரும் நமது புதிய சட்டங்களின் போக்கே இப்படித் தான்.

கேள்வி: சிப்பந்தி செய்யக்கூடிய தினசரி வேலையை (அதாவது 8 மணி நேர வேலையை) ஒரே மூச்சாய் செய்யச்சொல்லலாமா?

பதில்: கூடாது. அப்படிச் செய்யச் சொல்லவும் கூடாது; சிப்பந்தி சம்மதித்தாலும் அப்படிச் செய்ய அனுமதிக்கவும் கூடாது. 4 மணி நேரம் வேலைசெய்த ஒரு சிப்பந்திக்கு இளைப்பாற குறைந்தது ஒரு மணி இடைவேளை கொடுக்கவேண்டும். அதாவது ஓவர்டயம் உள்பட ஒரு சிப்பந்தி 10 மணி வேலைசெய்வதாக இருந்தால் முதல் 4 மணிக்குப் பிறகு 1 மணியும் மறு 4 மணிக்குப் பிறகு இன்னும் 1 மணியும் இரு முறை இடைவேளை கட்டாயம் கொடுக்க வேண்டும். அப்படி இடைவேளையில்லாமல் வேலை செய்யச் சொல்வதும் அனுமதிப்பதும் குற்றம். [9(2)-14(2)-45]

கேள்வி: சரி. அப்படி இடைவேளை கொடுத்தும், தினம் 8 மணிக்குமேல் இல்லாமலும், ஒரு தினத்தில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஒரு சிப்பந்தியை வேலை செய்யச் சொல்லலாமா? உதாரணமாய், காலை 8 மணி முதல் 12 மணிவரையிலும் பிறகு மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் வேலைநேரம் ஏற்படுத்தலாமா? இதில் வேலைநேரம் 8 மணிதானே, இடைவேளையும் ஒரு மணிக்குமேல் ரொம்ப ஜாஸ்தியாகக் கூட இருக்கிறதே?

பதில்: இதுவும் முடியாது. இது சம்பந்தமாய் ஒரு முக்கியமான விதி இருக்கிறது. அதாவது, ஒரு தினத்தில் சிப்பந்தியின் வேலைநேரம் ஆரம்பித்தது முதல் தொடர்ச்சியான 12 மணிக்குள் அவருடைய சாதாரண வேலைநேரம், ஓவர்டயம் என்ற அதிக வேலைநேரம், இடைவேளை எல்லாம் அமைந்திருக்க வேண்டும். உதாரணத்தில் காலை 8 மணிக்கு வேலை நேரம் ஆரம்பிப்பதால் இரவு 8 மணிக்குள் முடிந்துவிடவேண்டும். அதற்குமேல் வேலைநேரம் அச்சிப்பந்திக்கு நீடிக்கக்கூடாது. இந்த விதியை மீறினாலும் குற்றமே. [10-15-45]

கேள்வி: இவ்விதம் சிப்பந்திகளுக்கு வாரம் ஒருநாள் விடுமுறையும், தினசரி இச்சட்டத்திற்கு ஒத்தபடி வேலைநேரமும் ஏற்படுத்திக் கொள்வதைத் தவிர ஒரு சிப்பந்திக்கு வேறு ஏதாவது சலுகைகள் உண்டா?

பதில்: இன்னும் பல சலுகைகள் உண்டு. அவைகளைத்தான் மிக்க கவனத்துடன் தெரிந்துகொள்ள வேண்டும்.

(தொடரும்)

நீதிபதி: (கைதியைப் பார்த்து) நீர் தர்ம வைத்திய சாலையில் டாக்டரிடம் மருந்துச் சீட்டு வாங்கிக் கொள்ளும்போது அவருடைய கெடியாரத்தை திருடி விட்டதாக உமதுபேரில் கேசு! அதற்கு நீர் என்ன சொல்லுகிறீர்!

கைதி: எஜமானே! வேறு வழியில்லாமல் செய்தேன். டாக்டர் எழுதிக்கொடுத்த மருந்துச் சீட்டில் ஒவ்வொரு மணிக்கும் ஒரு ஸ்பூன் மருந்து சாப்பிட வேண்டுமென்று எழுதி இருந்தார். என்னிடம் மணி பார்க்க கடியாரம் இல்லாததினால் அதையும் எடுத்துக்கொண்டேன்.

வக்கீல்: (கக்ஷிக்காரரைப் பார்த்து) திருட்டுத்தனமாய் சாராயம் இறக்கினதாய் உம் மீது போடப்பட்டிருந்த கேசை பொய் என்று உமக்கு ஜெயித்துக் கொடுத்துவிட்டேன். என்ன பீஸ்தர உத்தேசம்?

கக்ஷிக்காரர்: ரொக்கமாய் கையில் பணம் ஒன்றுமில்லை. இரண்டு காலன் சாராயம் கொடுத்துவிடுகிறேன்.

திருடன்: (கன்னம் வைத்து திருடிய குற்றத்திலிருந்து கோர்ட்டால் விடுதலை செய்யப் பட்டதும் வக்கீலைப் பார்த்து) தங்களை வீட்டில் வந்து பார்க்கிறேன்.

வக்கீல்: சரி! ஆனால் பகல் நேரத்தில் வா.

புதிய சட்டங்கள்

சென்னை ஹிந்து பலதாரத்தடை விவாகரத்துச் சட்டம்

ஒரு மனைவி உயிருடன் இருக்கும்பொழுது மறுதாரம் மணம் செய்துகொள்ள முடியாது.

கோர்ட்டு மூலம் விவாகத்தை ரத்து செய்துகொள்ளலாம்.

இது சென்னை மாகாணத்திற்கு மட்டில்

அகில இந்தியாவிலுமுள்ள ஹிந்துக்களுக்கு செலவாணி ஆகக்கூடிய ஹிந்து (லா) சட்டத்தொகுப்பு மசோதா டில்லி பார்லிமெண்டில் மத்ய சர்க்காரால் கொண்டுவரப்பட்டு பலத்த விவாதத்தில் இருந்து வருவது நேயர்களுக்கு தெரிந்திருக்கலாம். அது ஹிந்துக்களுக்குரிய எல்லா சட்ட விஷயங்களையும், அதாவது வார்சு பாத்தியம், சுவீகாரம், விவாகம், அவிபக்த குடும்பம் முதலிய பலவகைப்பட்டவைகளையும் சீர்திருத்தி தொகுக்கும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது இன்னும் சட்டமாகவில்லை. அதற்குள் எதற்கும் முற்போக்குள்ள நம் சென்னை மாகாணத்தில் ஸ்திரவாசமுள்ள ஹிந்துக்களுக்கு மட்டில் செல்லக்கூடியதாய் ஒரு புது சட்டம் சென்னை சட்டசபையாரால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இது 29—3—1949 முதல் அமுலுக்கு வந்துவிட்டது. இது ஹிந்துக்கள், வீர சைவர், லிங்காயத், பிர்ம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர்கள், பிரார்த்தனை, ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள், பௌத்த மதத்தினர், ஜெயினர்கள், சீக்கியர்கள், ஹிந்துமதத்தை புதிதாய் தழுவியவர்கள் ஆகியவர்களுக்கும் பொருந்தும்.

மனைவி உயிருடன் இருக்கும்பொழுது மறு விவாகம் கூடாது— செல்லாது— செய்தால் தண்டனை: எக்காரணத்தைக் கொண்டும் மனைவி உயிருடன் இருக்கும்பொழுது ஒருவர் வேறு கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது. மனைவி இதற்கு சம்மதித்தாலும் முடியாது. இதற்கு விரோதமாக ஒருவர் இரண்டாவது கல்யாணம் செய்துகொண்டால் இச்சட்டப்படி "கல்யாண"மே செல்லாது. இச்சட்டம் இரண்டாவது கல்யாணத்தை கல்யாணமென்றே ஒப்புக்கொள்ளவில்லை. உதாரணமாய் இப்படி செல்லாத விவாகத்தில் பிறக்கும் ஒரு ஆண் குழந்தைக்கு "மகன்" என்ற முறையில் வார்சு பாத்தியம் ஏற்படாது. எப்படி ஒரு சம்சாரம் உயிருடன் இருக்கும் பொழுது புருஷன் வேறு கல்யாணம் செய்து கொள்ள முடியாதோ அப்படியே மனைவியும் தன் புருஷன் உயிருடன் இருக்கும்பொழுது வேறு ஒருவரை கல்யாணம் செய்துகொள்ள முடியாது.

(இந்த ஷரா நம் நாட்டுக்கு பொருத்தமில்லாமல் போனாலும் சட்டத்தில் இடுக்குகளுக்கும், சந்தேகங்களுக்கும் இடங் கொடுக்காமலிருக்கவே இது சேர்க்கப்பட்டிருக்கிறது.)

தண்டனை: இச்சட்டத்திற்கு மாறாக 18 வயது பூர்த்தியான ஒருவர் மறுமணம் செய்துகொண்டால் அவருக்கு இந்தியன் பீனல்கோடு என்ற சட்டப்படி 10 வருஷ சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

பெற்றோர், கார்டியன், புரோகிதர்களுக்கும் தண்டனை: 18 வயது பூர்த்தியாகாதவருக்கு இப்படிச்சட்ட விரோதமான கல்யாணம் நடந்தால் அதை செய்துவைத்தாலும், அனுமதித்தாலும், தெரிந்து தடுக்காமலிருந்தாலும், பெற்றோர்களுக்கும், கார்டியனுக்கும் 6 மாத சிறைவாச தண்டனை கொடுக்கலாம். இச்சட்டத்திற்கு மாறான கல்யாணங்களை நடத்திவைக்க உதவிசெய்வோருக்கும் (புரோகிதர் முதலியோருக்கும்) 6-மாத தண்டனை உண்டு.

187685

விவாகரத்து: தம்பதிகளில் எவரும் விவாகத்தை ரத்துச்செய்ய மனுப்போடலாம். மனு சப்கோர்ட், ஜில்லா கோர்ட், சென்னையில் சிடிசிவில் கோர்ட் இவைகளில் போடலாம். ஹைகோர்ட்டுக்கு அப்பீல் உண்டு. மனுவுக்கும் அப்பீலுக்கும் ஸ்டாம்பு ரூ. 10. விவாகரத்து விசாரணையை கோர்ட்டில் பகிரங்கமாய் நடத்தாமல் தனியாக நடத்த விதிகள் செய்யப்படும். விவாகத்தை ரத்துசெய்துகொள்ள தகுந்த காரணங்கள் இருந்தால்தான் விவாகம் ரத்து செய்யப்படும்.

விவாக ரத்துக்கான காரணங்கள்: (1) புருஷன் வேறு ஒரு ஸ்திரீயை வைப்பாக வைத்திருந்தால் மனைவி விவாக ரத்துகேட்கலாம். (2) அதேபோல் மனைவி வேறு ஒருவனுக்கு வைப்பாக இருந்தாலும், விபசாரியாக இருந்தாலும் புருஷன் மனுப்போடலாம். (3) தம்பதிகளில் ஒருவரைவிட்டு மற்றொருவர் தகுந்தகாரணமின்றி மூன்று வருஷத்திற்குமேல் ஓடிவிட்டாலும் (4) தம்பதிகளில் ஒருவருடைய ஹிம்சை மற்றொருவருக்கு சகிக்கமுடியாமலும் அபாயகரமாயும் இருந்தாலும் (5) ஒருவருக்கு வைத்தியத்தில் குணமடைய முடியாத பைத்தியம் பிடித்து அது ஐந்து வருஷம் நீடித்திருந்தாலும் (6) ஒருவர் ஐந்து வருஷம் குஷ்டரோகத்தால் அல்லது (7) மேக வியாதியால் பீடிக்கப்பட்டாலும் (இந்த வியாதிகள் மனுப்போடுபவரிடமிருந்து பரவினதாக இருக்கக்கூடாது.) (8) விவாக காலத்திலிருந்து தொடர்ச்சியாய் புருஷனுக்கு புருஷத்தன்மை இல்லாமலிருந்தாலும் (9) ஒருவர் ஹிந்து மதத்தை விட்டு வேறு மதத்தை தழுவினாலும் விவாகத்தை கோர்ட் மூலம் ரத்துசெய்து கொள்ளலாம்.

இச்சட்டத்திற்கு முன்பே ஒருவருக்கு இரண்டாவது கல்யாணம் ஆகி இருந்தால்: முதல் சம்சாரம் (18 வயது பூர்த்தியான பிறகு) விவாகத்தை ரத்துசெய்ய மனுப்போடலாம். மனுப்போடும் காலத்தில் இரண்டாவது மனைவி உயிருடன் இருந்தால்தான் இவள் மனுப்போடப்பாத்தியம்.

கோர்ட்டாரின் அதிகாரம்: விவாகத்தை ரத்துசெய்து குழந்தைகளின் போஷணை படிப்பு பற்றியும் புருஷன் பெண்சாதிக்குப் பொதுவாயுள்ள சொத்துக்களைப் பற்றியும் கோர்ட்டார் டிக்ரிமூலம் ஏற்பாடுசெய்யலாம், மனுமுடிவடையும் வரையிலும் ஜீவனும்சம் முதலியவற்றிற்கு தகுந்த உத்திரவுகள் செய்யலாம். விவாகம் ரத்தானபிறகும் வேறு புருஷனை கல்யாணம் செய்துகொள்ளும்வரை மாஜி மனைவிக்கு சில சந்தர்பங்களில் ஜீவனும்சம் கொடுத்துவர வேண்டுமென்றும் உத்திரவிடலாம்.

மறுவிவாகம்: விவாகம் ரத்தான பிறகு புருஷன் வேறு ஸ்திரீயையும், ஸ்திரீ வேறு புருஷனையும் மணந்து கொள்ளலாம். ஆனால் விவாகம் ரத்தான ஆறு மாதத்திற்குப் பிறகுதான் மறுவிவாக முகூர்த்தம் வைத்துக்கொள்ளவேண்டும்.

(சென்னை 1949-ம் வருஷத்திய 6-வது ஆக்ட்)

ஜீவனும்ச சட்ட மாறுதல்

அனாதரவு செய்யப்பட்ட மனைவி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஜீவனும்சம் கேட்கும் பாத்தியம். கணவன் மறு விவாகம் செய்துகொண்டாலும் வைப்பு வைத்திருந்தாலும் உண்டு.

மனைவியை சம்ரட்சிக்கவேண்டிய கடமை கணவனுடையது. மனைவியை அனாதரவு செய்தால் அவள் சிவில் கோர்ட்டில் ஜீவனும்ச வழக்குத்தொடரலாம். தவிர மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலும் (கிரிமினல் ப்ரொஸீஜர் கோடு 488-வது செக்ஷன்படி) மனுப்போட்டு பரிகாரம் அடையலாம். புருஷன் வேறு ஒருவளை மணம் செய்துகொண்டு அல்லது வைப்பு வைத்திருந்து அது காரணமாய் முதல் மனைவி அக்கணவனுடன் வசிக்க

மறுத்தால் இதுவரை அவள் கிரிமினல் கோர்ட் மூலம் பரிகாரம் அடையமுடியாம லிருந்தது. ஏனென்றால் புருஷன் இரண் டாவது கலியாணம் செய்துகொண்டாலும் வைப்பு வைத்திருந்தாலும் முதல் மனைவி யும் அதை சகித்துக்கொண்டு புருஷனுடன் இருக்கவேண்டியதுதான் அவளுடைய கடமை என்று சட்டத்திலும் இருந்தது. இனி அக்காலம் மலையேறிவிட்டது. இவ் விதமான சந்தர்ப்பத்தில் முதல் மனைவி புருஷனுடன் வசிக்கமாட்டேன் என்று சொல்ல பாத்தியமுண்டு. கிரிமினல் கோர் ட்டு மூலம் கூட அவள் புருஷன்மீது ஜீவ னாம்சத்துக்கு மனுப்போட்டு பரிகாரம் அடைய அவளுக்கு பாத்தியமுண்டு என்று புது திருத்தச் சட்டத்தில் சேர்க்கப்பட் டிருக்கிறது.

(மத்திய சட்டம் 1949-ம் வருஷத்திய 9-வது ஆக்ட்)

குறிப்பு: இச்சட்டம் அகில இந்தியா வுக்கும் உள்ள மத்ய சர்க்கார் சட்டம். சென்னையில்மட்டும் முதல் மனைவிக்கு விவாக ரத்து கொள்ளும் பாத்தியம் கொடுத்திருக்கும் சட்டத்தை நேயர்கள் இந்த இதழில் வேறு பகுதியில் காணலாம்.

சாரதா சட்டத்தில் மாறுதல்

இச்சட்டம் இந்திய யூனியன் பார்லி மெண்டில் பாசாகி விட்டது. மேன்மை தங்கிய கவர்னர்-ஜெனரல் அவர்களின் அனுமதி கிடைத்த பிறகு சட்டம் அமு லுக்குவரும். அடுத்தஇதழில் விபரமாய் சொல்லப்படும்.

குதிரைப் பந்தய (சூதாட்ட) ஒழிப்பு சட்டம்

சென்னை சர்க்கார் அறிக்கை: 1949-ம் வருஷத்து சென்னை குதிரைப் பந்தய (சூதாட்ட) ஒழிப்பு சட்டம் 1949 ஏப்ரல் 5-ந்தேதி வெளியான போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரமாகிவிட்டது.

இனிமேல் குதிரைப் பந்தயங்கள் சம்பந் தமான சூதாட்ட விஷயங்கள் அதாவது குதிரைகள் மீது பந்தயம் வைத்தல் முத லான விஷயங்கள் பற்றிய தகவல்களை அச் சிட்டு வெளியிடுதல், இவ்வித பிரசுரங்களை வினியோகித்தல், அல்லது குதிரைகள்மீது பந்தயம் பிடிக்க வேறெந்தவிதமான தகவல் களையும் அளித்தல் ஆகியவைகள் சட்ட விரோதமான குற்றங்களாகும். இம்மாகா ணத்திலும் வெளிமாகாணங்களிலும் நடை பெறும் குதிரைப் பந்தயங்களும் இச்சட் டத்தின்கீழ் வரும்.

சர்க்கார் விதிகளுக்குட்பட்டு, ரேஸ் கிளப்புகள் குதிரைப் பந்தயங்கள் சம்பந்த மான தகவல்களை அவைகளின் எல்லைக் குள்ளோ அல்லது பந்தய மைதானத்திலோ பிரசுரித்து வெளியிடலாம்.

மாகாணத்தில் வெளியாகும் பத்திரிகை களும் மாகாணத்திற்குள் வரும் வெளி மாகாணப் பத்திரிகைகளும், அயல் மாகா ணத்தில் நடைபெறும் குதிரைப் பந்தயங் கள்பற்றி மாத்திரம் எவ்வித தகவல்களும் பிரசுரிக்கலாம். ஆனால் இந்த மாகாணத்தில் நடைபெறும் பந்தயங்கள் சம்பந்தமாக சட் டத்தில் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைக்குட் பட்ட விஷயங்களை பிரசுரிக்கலாம்.

குதிரைகள் மீது பந்தயம் வைப்பதை தடுப்பது சர்க்காராக நிர்ணயிக்கும் ஒரு தேதியிலிருந்து ஆரம்பிக்கப்படுமென்று திருத்த சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. 1-4-1950 முதல் அமுலுக்குக் கொண்டுவர சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.

(சென்னை 1949-ம் வருஷத்திய 7-வது ஆக்ட்)

வீண் வியாஜ்ய தடைச் சட்டம்

இச் சென்னைச் சட்டம் 19—4—49-ல் அமுலுக்கு வந்துவிட்டது. வீண் வியாஜ்ய விவகாரங்களையே பழக்கமாய் வைத்துக் கொண்டிருப்பவர்களைக் குறித்து இச்சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தகுந்த காரணங்கள் இல்லாமல் வழக்கமாய் ஒருவர் சிவில் அல்லது கிரிமினல் கோர்ட்களில் வீண் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருந்தால் அவர் அப்படிச் செய்துவருகிறுர் என்று சென்னை அட்வகேட் ஜெனரல் ஹைக்கோர்ட்டில் மனுப் போடலாம். ஹைக்கோர்ட்டார் அந்த நபருக்கு நோட்டீஸ் அனுப்பி அவர் கக்ஷியைக் கேட்டு அவர் அப்படி வீண் வியாஜ்யங்களில் ஈடுபடுபவர் என்று தோன்றினுல் அவர் ஹைக்கோர்ட் உத்திரவு அன்னியில் சென்னையிலும் அந்தந்த ஜில்லா ஜட்ஜின் உத்திரவு அன்னியில் மற்ற இடங்களிலும் சிவில், கிரிமினல், விவகாரங்கள் தொடங்கக்கூடாதென்று உத்திரவு செய்யலாம். அதாவது இவ்விதம் ஒருவர்பேரில் உத்திரவு பிறந்த பிறகு அவர் எந்த விவகாரம் போடவேண்டியிருந்தாலும் மேற்கண்டபடி முன்பே கோர்ட்டின் அனுமதி பெற்றுத்தான் துடங்கவேண்டும். அனுமதி இல்லாமல் அவர் தொடங்கும் வியாஜ்யங்கள் முதலெடுப்பில் தள்ளுபடி ஆகும். அவர் கொடுக்க உத்தேசித்திருக்கும் விவகாரத்திற்கு தகுந்த ஆதாரங்களிருந்தால்தான் அதை தொடங்க அனுமதி கொடுக்கப்படும். (சென்னை 1949 வருஷத்திய 8-வது ஆக்ட்)

ராஜவிசுவாசப் பிரமாணம் இனி இல்லை

ஆங்கிலேய ஆட்சி முடிவடைந்ததும் அந்த ஆட்சி காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சின்னங்களும் ஒவ்வொன்றுய் மறைகின்றன. இதுவரை முனிசிபல் கவுன்சிலர் ஜில்லா போர்டு மெம்பர் முதலியோர் முதல் முதலில் சபையில் கலந்துகொள்ளுமுன் ராஜ விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும். இனி அது கிடையாது. ஆனுல் அங்கத்தினர்கள் "இந்திய தேசத்திற்கும் சட்டபூர்வமாய் ஏற்படும் இந்திய அரசாங்கத்திற்கும் உண்மையாக நடப்பேன்" என்று பிரமாணம் செய்யவேண்டும்.

(1949-ம் வருஷத்திய சென்னை 3-வது ஆக்ட்)

சென்னை ஜமீன்தாரி (இனும்) ஒழிப்புச் சட்டம்: வெகுநாட்கள் சட்டசபையில் விவாதத்திலிருந்து நிறைவேறின சென்னை ஜமீன்தாரி ஒழிப்பு மசோதா 2—4—49-ல் மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் அவர்களின் அனுமதியைப்பெற்று 19—4—49ல் சர்க்கார் கெஜட்டில் (1948-ம் வருஷத்திய 26-வது ஆக்டாக) பிரசுரம் செய்யப்பட்டு அன்றுமுதல் அமுலுக்கு வந்துவிட்டது. இந்த மிக முக்கியமான சட்டத்தைப் பற்றியும் அதன் மூலம் எவ்வகைப்பட்ட இனும் கிராமங்களும் பாதிக்கப்படுமென்றும் அடுத்த இதழ் முதல் விபரமாய் எழுதப்படும்.

மாகாண சர்க்கார் நேரடியாக பஸ்-சர்வீஸ் நடத்த சட்டம்

இதற்காக மோட்டார் வண்டிச் சட்டம் (1939) திருத்தப்பட்டிருக்கிறது. மாகாண சர்க்கார் தாங்களே மாகாணம் முழுவதிலுமோ, குறிப்பிட்ட மார்க்கங்களிலோ, பஸ் சர்விஸ் ஏற்படுத்தி ரஸ்தா போக்குவரத்துத் தொழிலில் ஈடுபடுவதாக இருந்தால் அதை முதலில் கெஜட்டில் விளம்பரம் செய்வார்கள். ஏற்கனவே அந்த மார்க்கங்களுக்கு பர்மிட் வாங்கி பஸ்ஸர்விஸ் நடத்துவோருடைய பர்மிட்டுக்களை சர்க்கார் ரத்து செய்யலாம். ஆனுல் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ரத்துசெய்யப்பட்ட பர்மிட்காரர்களுக்கு சர்க்கார் நஷ்டஈடு கொடுப்பார்கள். 10-7-1947 முதல் தொடர்ச்சியாய் பர்மிட் வைத்திருப்பவர்களுக்குத்தான் இந்த நஷ்டஈடுகிடைக்கும். மாகாண போக்குவரத்து கமிஷனர் என்று ஒரு அதிகாரியை சர்க்கார் நியமிப்பார்கள். இனி கொடுக்கப்படும் பர்மிட்டுகள் ரீஜினல் டிரான்ஸ் போர்ட் அதாரிடிக்கு யுக்தமாய்த் தோன்றும் கால அளவுக்கே பர்மிட் கொடுக்கப்படும்.

மறுபடி விவசாயி கடன் நிவாரணச் சட்டத் திருத்தம்

மேல்வார பாக்கிக்கும் வட்டி குறைக்கப்பட்டிருக்கிறது: இனும்தார் அல்லது ஜமீன் தாருக்கு ரயத்துக்கள் கொடுக்க வேண்டிய மேல்வார பாக்கிக்கும் விவசாயி கடன் நிவாரணச் சட்டம் அனுஷ்டிக்கப்படும்.

சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தில் புதிதாய் சேர்க்கப்பட்ட போக்கிய (ஒத்தி) ரத்து முதலிய முக்கிய திருத்தங்கள் "வக்கீல்" பத்திரிகையின் ஏப்ரல் இதழில் விபரமாய் விளக்கப்பட்டிருக்கிறது.

மறுபடியும் விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தில் ஒரு சிறிய திருத்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது:-"கடன்" என்பதில் இனும், ஜமீன் இவைகளிலுள்ள ரயத்துக்கள் (குடிவார பாத்தியமுள்ளவர்கள்) கொடுக்கவேண்டிய "மேல்வாரத் தகை" சேர்க்கப்படவில்லை. அக்காரணத்தால் மேல்வார பாக்கிக்கு வட்டியை குறைக்கவும் இதுவரை இச்சட்டம் பிரயோஜனப் படாமல் இருந்தது. அதை மாற்ற கொண்டு வரப்பட்டிருக்கும் திருத்தச் சட்டப்படி இனி மேல்வாரத் தகைக்கும் வட்டி 100க்கு வருஷம் 1-க்கு 5½ தான் சேரும். கூடுதலாகும் வட்டி விகிதத்தை சர்க்கார் யுக்தப்படி மாற்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெண்டிங்கிலிருக்கும் எல்லா விவகாரங்களிலும் ஜாடாத் தகையும் வசூலாகாமலிருக்கிற டிக்ரிகளிலும் இனி ஏற்படும் விவகாரங்களிலும் வட்டி குறைக்கப்படும். ஆனால் தாவா முதல் முதலில் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட தேதிக்கு முன் இரண்டு வருஷங்களுக்கு வருமான வரி, சொத்துவரி, தொழில்வரி இவைகள் போடப்படாத வருக்குத்தான் இச்சட்டப்படி வட்டி குறைக்கப்படும்.

(சென்னை 1949-ம் வருஷத்திய 5-வது ஆக்ட்)

பொதுப் புத்தக சாலைச் சட்டம்

(சென்னை பப்ளிக் லைப்ரரீஸ் ஆக்ட். 1948-ம் வருஷத்திய 24-வது ஆக்ட்)

பொது ஜனங்களுக்கு உபயோகப்படக் கூடிய முறையில் பட்டிணங்களிலும் கிராமப் பிரதேசங்களிலும் பல புத்தக சாலைகள் ஏற்படுத்தவும், அவைகளை பொது ஜனங்கள் உபயோகித்து பயனடையும்படி செய்யவும், அவைகளை மேன்பார்வை பார்க்கவும், ஆலோசனை சொல்லவும், அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். மாகாண சர்க்காருக்கு ஆலோசனை சொல்ல ஒரு கமிட்டியும், எல்லா புத்தக சாலைகளையும் மேன்பார்வை பார்க்க ஒரு டைரெக்டரும் உண்டு. சென்னை நகரிலும், ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு புத்தக நிலைய சபை அமைக்கப்படும்.

இதற்கு வரி: பொது புத்தக சாலைகள் நடத்த ஜில்லா போர்டு, முனிசிபாலிடி இவை வசூலிக்கப்படும் வீட்டு வரியுடன் ரூ. 1-க்கு அரை அணு வீதம் செஸ்வரி வசூல் செய்து அந்தந்த புத்தக நிலைய சபையாரிடம் கொடுக்கப்படும். இதைக்கொண்டு அவர்கள் புத்தக சாலைகள் ஏற்படுத்தி நடத்துவார்கள்.

அச்சாபீஸ்காரர்கள் கவனிக்கவேண்டியது

பொதுப் புத்தகசாலைச் சட்டத்தின் 19-வது செக்ஷன்படி இனி எல்லா அச்சாபீஸ்களிலும் அச்சடிக்கப்படும் புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் அச்சு முடிந்த ஒரு மாதத்திற்குள் சர்க்காருக்கு 5 பிரதிகள் அனுப்ப வேண்டும். மாறுதல் எதுவுமில்லாத பிந்திய பதிப்புகளுக்கு ஒருமுறை 5 பிரதிகள் அனுப்பப்பட்டிருந்தால், மறுபடியும் அனுப்பவேண்டியதில்லை.

விற்பனை வரி

S. சாம்பசிவய்யர் B. A., B. L.

நீங்கள் ஒரு வியாபாரியாக இருந்தால் தான் விற்பனைவரி கொடுக்கவேண்டும். வியாபாரி அல்லாத ஒருவர் ஏதோ ஒரு சமயத்தில் ஒரு சாமானை விற்றால் அதற்கு ஒருவரும் வரிகொடுக்க வேண்டியதில்லை. வியாபாரிகளும் ஜங்கம சொத்துக்களில் வியாபாரம் செய்பவர்களாக இருக்கவேண்டும். அதாவது விற்பனை வரி பொதுவாக ஜங்கம சொத்துக்களின் விற்பனையின்பேரில் ஏற்படுத்தப்பட்ட வரி. வீடு, நிலம் முதலிய ஸ்தாவர சொத்துக்களின் விற்பனைக்கு வரி கிடையாது. ஜங்கம சொத்துக்கள் என்றால் தஸ்தாவேஜுப்படி வரவேண்டிய கடன் தொகைகளும், கம்பெனி பங்குகளும் சர்க்கார் பத்திரங்களும் அதில் சேராது.

ஒரு "விற்பனை" யில் இருவர் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். ஒருவர் விற்பவர், மற்றொருவர் வாங்குபவர். இவ்விருவர்களில் ஒருவர்தான் சர்க்காருக்கு விற்பனைவரி கொடுக்கவேண்டும். பெரும்பாலும் நமது மாகாண சட்டப்படி விற்பனை செய்யும் வியாபாரிதான் இவ்வரி கொடுக்கவேண்டும். அதுவும் ஒருவருடத்தில் ஒரு வியாபாரியின் மொத்தவியாபாரம் ரூ. 10,000க்குள் இருந்தால் இவருக்கு வரி கிடையாது. இந்த விற்பனைவரியின் அதிசயம் என்ன என்றால், ஒரே பொருள், வியாபாரத்தில் கை மாறி மாறி, படிப்படியாய் வரும் ஒவ்வொரு தடவையும் சர்க்காருக்கு விற்பனை வரி உண்டு. கடைசியாக ஒரு பொருளை உபயோகத்திற்காக வாங்குபவர்தான் இந்த வரியின் பளுவை தாங்க வேண்டியவரானாலும் அதை அவர் உணரமுடியாது. முதலில் ஒரு பெரிய மொத்த வியாபாரியிடமிருந்து நடுத்தர வியாபாரி வாங்கும்போது ஒரு தடவை வரி. இவர் தனக்குக் கீழ்ப்பட்ட வாடிக்கை வியாபாரிகளிடம் விற்கும்பொழுது ஒருதடவை; இப்படி பலமுறை வியாபாரிகளுக்குள்ளே மாற்றப்படும் ஒவ்வொரு தடவையும் விற்பனைவரி சேர்த்து கடைசியாக சொந்த உபயோகத்திற்காக பொருள் வாங்குபவருடன் நின்றுவிடும்.

இதைத்தவிர சில குறிப்பிட்ட சாமான்களுக்கு இரண்டுவித வரிஉண்டு. சில குறிப்பிட்ட சாமான்களுக்கு மட்டில் ஏதோ ஒரு கட்டத்தில் மட்டும்தான் வரி. இவைகள் பொது விதிக்கு விலக்கு. (அவைகளைப்பற்றி பிந்தி விவரிக்கப்படும்.) நீங்கள் எவ்வளவு ரூபாய் விற்பனை வரி கொடுக்க வேண்டுமென்று கணக்குப் பார்வையிடும் அதிகாரி, நீங்கள்வியாபாரத்திற்காக போட்ட முதல் தொகை எவ்வளவு என்று கவனிக்க மாட்டார். உங்களுக்கு வியாபாரத்தில் லாபமா, நஷ்டமா, விற்பனைத் தொகைகள் வசூலாகிவிட்டனவா என்றுகூட கவனிக்க மாட்டார். நீங்கள் ஒரு வருடத்தில் மொத்த ரூபாய் பத்தாயிரத்திற்கு குறையாமல் விற்பனை செய்திருக்கிறீர்களா என்று மட்டுந்தான் கவனிப்பார். ஒரு ஆயிர ரூபாயை வைத்து சரக்கு கொள்முதல் செய்து அதைவிற்று மறுபடியும் அவ்விதமே பல முறை செய்வதில் ஒருவருடத்தில் பத்தாயிர ரூபாய்க்குக் குறையாமல் விற்பனை நடத்தியிருந்தால் போதும். அப்படி வியாபாரம் செய்வதில் நஷ்டம் அடைந்திருந்தால் ஏன் இந்தவரி கொடுக்க வேண்டும். அது நியாயமல்லவே என்று யாராவது நினைத்தால் அது தவறு. ஏனென்றால் சர்க்காருக்கு விற்பனை வரி கொடுப்பது வியாபாரிகளாகிய உங்கள் கையாக இருந்தாலும் நீங்கள் வரியாகக் கொடுக்கும் தொகை உங்கள் கையைவிட்டு கொடுக்கப்படவில்லை. உங்களிடம் வியாபாரத்தில் சாமான்வாங்கியவர்களிடம் நீங்கள் விற்பனை வரி என்று வசூல் செய்த தொகையைத் தானே சர்க்காருக்கு கொடுக்கிறீர்கள். இதற்கும் உங்கள் லாப நஷ்டத்திற்கும் என்ன சம்பந்தம்?

இருந்தாலும் அந்த விற்பனை வரியை சரிவர சர்க்காரிடம் ஒப்புவிக்கும்வரை

பொறுப்பு உங்களுடையதே. அது சம்பந்தமாய் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கிய விஷயங்களும் சில்லரை விஷயங்களும் சில உண்டு. இவைகளை நீங்கள் தெரிந்து கொள்வதில் லாபமும், தெரிந்து கொள்ளாமல் இருப்பதினால் சில சங்கடங்களும் இருக்கின்றன.

சில பொருள்களுக்கு விற்பனை வரியே கிடையாது. சில சாமான்களுக்கு சாதாரண விற்பனை வரியாகிய ரூபாய்க்கு காலணாவுக்குமேல் விசேஷ வரிகொடுக்கவேண்டும். அவை என்ன? சில வியாபாரிகள் விற்பனை செய்யும்பொழுது சாமான் வாங்குபவரிடம் விற்பனைவரி வசூல் செய்யக்கூடாது. இவர்கள் யார்? சட்டத்தில் மொத்த விற்பனைத் தொகையை கணக்குச்செய்வதில் எந்தெந்த தொகைகளைக் குறைத்துக் கொள்வார்கள்? உங்கள் கணக்கை ஒரு உத்தியோகஸ்தர் நம்பாவிட்டால் நீங்கள் செய்யவேண்டியது என்ன? வரி அதிகாரிகளுக்கு எந்த எந்தக் காலத்தில் கணக்குகளும் வரிகளும் மனுக்களும் கொடுக்கப்படவேண்டும். எவைகளை செய்தாலும் செய்யத் தவறினாலும் குற்றமாகும். இதைபோலுள்ள பல சங்கதிகளை ஒவ்வொன்றாய் சட்டத்தின் ஆதாரங்களைக் கொண்டும், ரூல்கள், சர்க்கார் விளம்பரங்கள் இவைகளின் ஆதாரங்களைக்கொண்டும் கவனிப்போம்.

ஒவ்வொரு வியாபாரியும் கட்டாயமாய் பதிவு (ரிஜிஸ்டர்) செய்துகொள்ள வேண்டும்

விற்பனைவரிச் சட்டத்தில் இந்த நிபந்தனை புதிதாய் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கும் லைசென்சுக்கும் சம்பந்தமில்லை. இப்புது விதிப்படி ஒருவருடத்தில் ரூபாய் 7500-க்கு குறையாமல் விற்பனை செய்யும் ஒவ்வொரு வியாபாரியும் தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். புதிதாய் வியாபாரம் ஆரம்பித்தாலும், பழைய வியாபாரம் விருத்தியானாலும் எந்த மாதத்தில் அந்த வருடத்தின் மொத்த விற்பனை ரூ. 7500-ஐத்தொடுகிறதோ அதற்கு அடுத்த மாதத்திற்குள் உங்கள் ஊர் உதவி வியாபாரவரி அதிகாரிக்கு (ஏ.ஸி. டி.ஓ.) மனுப் போடவேண்டும். மனுவுக்கு கட்டணம் ரூ. 6. இதைக்கஜானவில் செலுத்தி ரசீது அனுப்பலாம். மணியார்டர் அல்லது செக் மூலமும் அனுப்பலாம். ஒவ்வொரு வருஷமும் மே மாதம் முதல் தேதிக்குள் ரூபாய் 6-வீதம் அனுப்பிவர வேண்டும். 7500 ரூபாய் விற்பனை யில்லாத வியாபாரிகளும் இஷ்டப்பட்டால் பதிவு செய்து கொள்ளலாம். ஆனால் கட்டாயமில்லை. பதிவு செய்துகொள்வதில் பல நன்மைகள் இருப்பதால் இவர்களும் முன்னடியே பதிவு செய்து கொள்வது நலம். பதிவு செய்து கொண்டவர்கள் எல்லோரும் விற்பனைவரி கொடுக்கவேண்டும் என்று நினைக்காதீர்கள். பதிவு செய்து கொண்டாலும் இல்லாவிட்டாலும் 10,000-ரூபாய்க்கு குறைந்த மொத்த விற்பனை உள்ளவர்களுக்கு விற்பனை வரி கிடையாது.

ரிஜிஸ்டர் (பதிவு) செய்து கொள்ளாவிட்டால்:

(1) பதிவு செய்துகொண்ட வியாபாரிகள் தான் தங்களிடம் சாமான் வாங்குபவரிடம் விற்பனைவரி வசூல் செய்யலாம். பதிவு செய்துகொள்ளாத வியாபாரி விற்பனைவரி வசூல்செய்வது குற்றமாகும். ரூ. 1000-வரை அபராதம் கொடுக்கநேரிடும். தவிர அப்படி வசூல் செய்த தொகையையும் சர்க்காருக்குக் கொடுத்துவிட வேண்டும். (2) பதிவு செய்து கொண்ட வியாபாரியும் சட்டப்படி எவ்வளவு விற்பனை வரியோ அதைத்தான் சாமான் வாங்குபவரிடம் வசூல் செய்யலாம். ஜாஸ்தி வசூல் செய்வது குற்றம். (3) விற்பனை வரியை சாமான வாங்குபவர்களிடம் வசூல் செய்திருந்தால் அப்படி வசூல் செய்த தொகை அந்த வியாபாரி கொடுக்கவேண்டிய வரியைவிட அதிகமாக இருந்தால், அப்படி ஜாஸ்தியாக இருக்கும் தொகையை வியாபாரி வரிவசூல் செய்த வருடத்திற்கு அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 30 தேதிக்குள் சர்க்காரிடம் கட்டிவிடவேண்டும்; தவறினால் குற்றம். அந்தத்தொகையும் வசூல் செய்யப்படும். இந்தத்தொகை அந்த வியாபாரி கொடுக்க வேண்டிய வரியைத் தவிர.

வரி விகிதம்

மொத்த வியாபாரத் தொகைக்கு ரூபாய் 1-க்கு காலணு விகிதம் விற்பனைவரி கொடுக்கவேண்டும். [3. (1)] சில குறிப்பிட்ட சாமான்களின் விற்பனையில் பொதுவாக எல்லா வியாபாரியும் கொடுக்கவேண்டிய காலணு வரியையும் கொடுத்து அதற்கு மேற்கொண்டு அதிக வரியும் கொடுக்க வேண்டும். விபரம் கீழே சொல்லப்படும். ஆனால் (1) சில சாமான்களின் விற்பனைக்கு வரி கிடையாது. (2) சில சாமான்களின் விற்பனைக்கு வரிகுறைவு. [5] (3) சில சாமான்களுக்கு விற்பனைவரி கொடுத்தாலும் ஒரு பாதியை (ரிப்பேட்) திருப்பிவாங்கி விடாலாம். (4) கமிஷனுக்காக மட்டில் குறிப்பிட்ட முதலாளியின் ஏஜண்டாக சாமான்களை விற்பவர் வரிகொடுக்க வேண்டியதில்லை.

லைசென்சு இருந்தால்தான் லாபமடையலாம்.

இவ்விதம் வரிகிடையாத சாமான்களிலும் குறைந்த வரி சாமான்களிலும் வியாபாரம் செய்பவர் அந்தந்த சாமான் வியாபாரத்திற்காக தனித்தனி லைசென்சு வாங்கிக் கொண்டால்தான் லாபமடையலாம். லைசென்சு வாங்கிக்கொள்ளா விட்டால் எல்லா சாமான்களுக்கும் கொடுப்பது போல் விற்பனைவரி பூராவும் கொடுக்க வேண்டும். சட்டத்தில் அந்த சாமான்களுக்குள்ள விற்பனைவரி வஜா இருந்தாலும் லைசென்சு வாங்கிக்கொள்ளாமல் அந்த சாமான்களை விற்பவருக்கு யாதொரு வஜாவும் கிடையாது. பல இடங்களில் வியாபாரம் செய்பவர் ஒவ்வொரு இடத்திற்கும் தனித்தனி லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும். அதேபோல் கமிஷன் ஏஜண்டாக மட்டில் வியாபாரம் செய்பவரும் ஒரு லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும். லைசென்சு வாங்கிக்கொள்ளாமல் கமிஷன் ஏஜெண்டு முறையில் விற்றாலும் அவ்விதம் விற்பவர் விற்பனைவரி கொடுக்க வேண்டும். லைசென்சு வாங்க வியாபாரி ஆக்டுபடி வரி செலுத்துபவராக இருந்தால் அந்த வியாபாரிக்கு வரிபோடும் அதிகாரியிடமும், மற்றவர்கள் A. C. T. O. அவர்களிடத்திலும் ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல் 30-ம் தேதிக்குள் மனு கொடுக்க வேண்டும். பிரதி வருடம் புதுப்பிக்கவும் ஏப்ரல் 30-ம் தேதிக்குள் மனுப்போட வேண்டும். லைசென்சு கட்டணத்தையும் கஜனுவில் கட்டி ரசீதையோ, செக்கையோ, மனுவுடன் அனுப்பவேண்டும்.

(லைசென்சு கட்டண விகிதம் 18-ம் பக்கம் பார்க்கவும்)

குறிப்பிட்ட தேதிக்குள் லைசென்சு கட்டணம் கட்டாவிட்டால் வரி குறைவு (கட்டணம் கட்டும் தேதிவரையில்) நடந்த விற்பனைக்கு கேட்கமுடியாது. மேலும் பிறகு கணக்குப்பார்த்ததில், லைசென்சு பெற்றவர் அதிக கட்டணம் கட்ட வேண்டுமென்று ஏற்பட்டால், அதைக் கட்டிவிட வேண்டும். அல்லது கட்டின கட்டணம் ஜாஸ்தி என்று ஏற்பட்டாலும் சர்க்காரிடமிருந்து (ரீபண்டு) வாபஸ் பெறலாம். லைசென்சில் கண்டநிபந்தனைகளை வியாபாரி மீறினால் லைசென்சு ரத்து செய்யப்படும்.

இப்பொதுவான விஷயங்களைத் தெரிந்து கொண்டபிறகு, எந்த சாமான்களை விற்றால் அதிக விற்பனைவரி (அதாவது ரூபாய்க்கு காலணுவுக்கு மேல்); எந்த சாமான்களின் விற்பனைக்கு குறைந்தவரி; எந்த சாமான்களின் விற்பனைக்குச் சாதாரண வரிகொடுத்திருந்தாலும் அதில் ஒருபாகத்தை திருப்பி வாங்கிவிடலாம்; விற்பனை அதிகாரிகள் யார்; அவர்களின் அதிகாரம்; அவர்களுக்கு அனுப்பவேண்டிய கணக்குகள் என்ன; எப்பொழுது அனுப்பவேண்டும்; மொத்த விற்பனையை கணக்குச்செய்வதில் எந்த எந்த சிலவுகளை கழித்துக் கொள்ளலாம். இம்முக்கிய விஷயங்களை கவனிப்போம்.

(தொடரும்)

லைசென்சு கட்டண விகிதம்

ஒரு வருஷத்துக்கு	மொத்த வியாபாரம் ரூ. 10,000ஆவது அல்லது அதற்கு மேலும் ஆனல் ரூ. 20,000க்கு மேல் இல்லாவிட்டால்	மொத்த வியாபாரம் ரூ. 20,000க்கு மேல் ஒரு லக்ஷ ரூபாய்க்கு மேற்படாமல் உள்ளவர்களுக்கு	மொத்த வியாபாரம் ஒரு லக்ஷத்திற்குமேல் உள்ள ஒவ்வொரு லக்ஷம் அல்லது அதன் 1 பாகம்
1. பஞ்சு, கதர் நூல் அல்லாத பருத்தி நூல், சேர்த்தோ தனிமையிலோ வியாபாரம் செய்பவருக்கு	75	150	+ 100
2. மில் நூல் தனியாகவோ கலந்தோ கைநெசவு ஜவுளி வியாபாரிகளுக்கு	25	50	,,
3. தங்கம் வெள்ளி நாணயங்கள் வியாபாரம் செய்பவருக்கு	75	150	,,
4. தோலிலும் பதனிட்ட தோலிலும் வியாபாரம் செய்பவருக்கு.	25	50	,,
5. கமிஷன் ஏஜண்டாக இருந்து வியாபாரம் செய்ய	100	200	,,
6. கதர் ஜவுளியில் வியாபாரம் செய்ய	கட்டணம் கிடையாது. ஆனல் கட்டணமில்லாமல் லைசென்சு வாங்கிக்கொள்ளவேண்டும்.		

K. S. நாராயணசாமி & கோ.,
நியூஸ் ஏஜண்டு
மடத்துத்தெரு :: கும்பகோணம்
நாங்கள் அறிவு வளர்ச்சிக்கு உகந்த எல்லா வார, மாதப் பத்திரிகைகளுக்கும் ஏஜண்டுகள். சந்தாதாரராக சேருங்கள்.

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்

இதர சர்க்கார் அறிக்கைகள்

உணவு தானியம்

கொண்டைக்கடலை (கொத்துக்கடலை) கண்ட்ரோல் உத்தரவு (1949)

சென்னை மாகாணத்திற்கு வெளியே உள்ள இடங்களிலிருந்து இம்மாகாணத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன்களுக்கு அல்லது துறைமுகங்களுக்கு வரும் கடலை, கடலைப்பருப்பு, கடலைமாவு, பொட்டுக்கடலை முதலிய கடலைச் சரக்குகளை வரவழைப்பவரும், வேறு எவரும் (டிலிவரி) எடுத்துக் கொள்ளுமுன் ரயில்வே அல்லது கப்பல் ரசீதுகளில் சரக்கு வந்திருக்கும் ஜில்லா கலெக்டருடைய (அல்லது கலெக்டரிடம் அதிகாரம் பெற்றவருடைய) அனுமதி கையெழுத்து இருந்தாலொழிய சரக்கை பெற்றுக்கொள்ள முடியாது. அப்படி அனுமதி பெற்று டிலிவரி எடுத்துக்கொண்ட பிறகும் கலெக்டர் அல்லது அவரிடம் அதிகாரம் பெற்றவருடைய அனுமதி அன்னியில் அச்சரக்கை விற்கக்கூடாது. ஏற்கனவே உணவு தான்யகட்டுப்பாடு உத்திரவுப்படி லைசென்சு இல்லாதவர் அப்படி கலெக்டருடைய அனுமதிபெற்றாலும் அவருக்கு அந்த பிரஸ்தாப சரக்கைப் பொருத்தமட்டில் சேமிக்கவும், விற்கவும் அனுமதி கொடுத்ததுபோல் ஆகும்.

இந்த விதி ரயில்வே கிரெய்ன் ஷாப்புகளுக்காக வரவழைக்கப்படும் கடலைக்கும், கடலைச் சரக்குக்கும் கிடையாது. 1947-ம் வருஷத்திய உணவுதான்யக் கண்ட்ரோல் உத்திரவுப்படி கடலை, கடலைப்பருப்பு, கடலை மாவு முதலியவைகளில் வியாபாரம் செய்ய லைசென்சு பெற்றவர்கள்கூட மாகாணத்துக்கு வெளியிலிருந்து வரவழைத்த கடலைச் சரக்கை விற்க ஜில்லா கலெக்டர் அல்லது அவரிடம் அதிகாரம் பெற்றவருடைய எழுத்துமூலமான உத்திரவு அன்னியில் அதை விற்கக்கூடாது. வேறு அப்படி தருவிக்கும் வியாபாரியிடமிருந்து வாங்கவும் கூடாது. இந்த உத்தரவை மீறினல் குற்றம். கடலை, அல்லது கடலைப்பருப்பு, அல்லது கடலை மாவும் சாக்கு உள்பட சர்க்காருக்கு பறிமுதலாகலாம்.

(19-4-1949 சர்க்கார் கெஜட் பாகம் II ஸூல் சப்ளிமெண்ட் பக்கம் 48)

கொண்டைக்கடலை விலைநிர்ணய உத்தரவு 1949

கடலை, கடலைப்பருப்பு, கடலை மாவு முதலிய எல்லா கடலைப் பதார்த்தங்களுக்கும் அந்தந்த ஜில்லா கலெக்டர் (அல்லது அவரிடம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர்) மொத்த விலையையும், சில்லரையில் விற்கக் கூடிய விலையையும் நிர்ணயம் செய்வார். அந்த விலைக்குமேல் மொத்த வியாபாரி விற்றாலும், சில்லரை வியாபாரி விற்றாலும் குற்றம். சரக்கும் சர்க்காருக்கு பறிமுதல் ஆகும். சரக்கின் விலை, ரயில் சத்தம், முதலிய செலவையும் லாபம் இவைகளையும் சேர்த்து கலெக்டர் விலைநிர்ணயம் செய்வார்.

(19—4—49 சர்க்கார் கெஜட் பாகம் II ஸூல் சபளிமெண்ட் பக்கம் 49)

ஜவுளி நூல்

கலர் நூல்-தையல்நூல் உற்பத்தித் தடை

ஜவுளி கமிஷனருடைய பிரத்தியேக அனுமதி அன்னியில் நூல் உற்பத்தியாளர் (மில்காரர்) ஒருவரும் 31-12-49 வரை கலர் நூலாவது தையல் நூலாவது உற்பத்தி செய்யக்கூடாது. ஆனல் உற்பத்தியாளரின் சொந்தத் தறிக்குத் தேவையான கலர் நூல் மட்டும் அவர் உற்பத்தி செய்து கொள்ளலாம்.

(19—4—49 சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 345)

குறிப்பு: உற்பத்தியாளர் (ப்ரொடியூசர்) என்பதற்கு 1948-ம் வருஷத்திய பருத்தி

ஜவுளி கட்டுப்பாடு உத்திரவின் 3 (h) கிளாஸ்படி "ஜவுளி அல்லது நூலை விசை யந்திரங்களால் உற்பத்தி செய்பவர்" என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜவுளி வியாபாரிகள் - ரிடர்ன் - ரிஜிஸ்டர் மாறுதல்: மொத்த கன்ஸைனி, மொத்த வியாபாரி, சில்லரை வியாபாரி எவரும் தனக்கு அலாட் ஆன ஜவுளிகளை (டிலிவரி) எடுத்துவந்த 24 மணி நேரத்திற்குள் அந்த ஜில்லா கலெக்டருக்கு III நமூனாப்படி விபரம் தெரியப்படுத்த வேண்டுமென்று (16—11—48 சர்க்கார் கெஜட்டில் பாகம் II பக்கம் 941ல் விளம்பரப்படுத்தி) இருந்த மாகாண ஜவுளி கமிஷனரின் உத்திரவு இரண்டு விஷயங்களில் மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது:

(1) இனி சில்லரை வியாபாரி III-வது நமூனாப்படி கலெக்டருக்கும் ஜவுளி இன்ஸ்பெக்டருக்கும் விபரம் அனுப்பவேண்டியதில்லை. ஆனால், அவர் III-A நமூனாப்படி 3 தினங்களில் விபரம் (ரிடர்ன்) அனுப்பவேண்டும். (III-A நமூனா கீழே விவரிக்கப்பட்டிருக்கிறது.)

(2) மொத்த கன்ஸைனியும் மொத்த வியாபாரியும் கூட இனி 24 மணி நேரத்தில் விபரம் (ரிடர்ன்) அனுப்பவேண்டியதில்லை. அவர்கள் பழைய III நமூனாப்படியே 3 தினங்களில் கலெக்டருக்கும், ஜவுளி இன்ஸ்பெக்டருக்கும் ரிடர்ன் அனுப்பவேண்டும்.

மேலும் (16—11—48 தேதி சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 942-ல் விளம்பரப்படுத்தியிருக்கும்) மாகாண கமிஷனரின் உத்திரவுப்படி மொத்த கன்சைனி, மொத்த வியாபாரி, சில்லரை வியாபாரி எவரும் வைத்துக்கொள்ள வேண்டிய ஸ்டாக் ரிஜிஸ்டர் பிரகாரம் இனி சில்லரை வியாபாரி மட்டில் வைத்துக்கொள்ளக்கூடாது. சில்லரை வியாபாரிகள் இனிவைத்துக்கொள்ளவேண்டிய தினசரி ஸ்டாக் ரிஜிஸ்டர் நைஸ் ரகங்களுக்கு நமூனா 4-A படிக்கும் இதர ரகங்களுக்கு நமூனா 4-B படிக்கும் இருக்கவேண்டியது. (விபரம் கீழே காணலாம்) சில்லரை வியாபாரி கொடுக்கவேண்டிய பில் சம்பந்தமாயும் மாறுதல் ஏற்படுத்தப்பட்டிருப்பதையும் கவனிக்கவும்.

சில்லரை ஜவுளி வியாபாரிகள் இனி அனுப்பவேண்டிய (ரிடர்ன்) விபரம்: சில்லரை ஜவுளி வியாபாரி தனக்கு அலாட் செய்யப்பட்ட ஜவுளி மூட்டைகளை (டிலிவரி) எடுத்து வந்த 3 தினங்களுக்குள் ஜில்லா கலெக்டருக்கு (அடியில்கண்ட நமூனாப்படி) ஸ்டேட்மெண்ட் அனுப்பவேண்டும். அதன் நகல் ஒன்றை அதே மூன்று தினங்களுக்குள் ஜவுளி இன்ஸ்பெக்டருக்கும் அனுப்ப வேண்டும்.

நமூனா III-A

.................செண்டர்..................ஜில்லா சில்லரை ஜவுளி வியாபாரி ஜவுளி பெற்றதை காண்பிக்கக்கூடிய ஸ்டேட்மெண்ட்.

						வேஷ்டி		புடவை		மல்		
மாதக் கோட்டா	சப்ளை செண்டர்	ரயில்வே ரசீது R/R கிடைத்த தேதி	இன்வாய்ஸ் நம்பர்	ஜவுளி மூட்டைகளை எடுத்துவந்த தேதி	மொத்த கஜம்	சூபர்பைன்	பைன்	சூபர்பைன்	பைன்	சூபர்பைன்	பைன்	மற்ற ரகத்தை மொட்டா வேஷ்டி, புடவை மல்களின் மொத்த கஜம்
1	2	3	4	5	6	1		2		3		4

சில்லரை ஜவுளி வியாபாரிகள் நைஸ் ரகங்களுக்கு தனி தினசரி ஸ்டாக் ரிஜிஸ்டர் வைத்துக்கொள்ள வேண்டும்

சில்லரை ஜவுளி வியாபாரத்திற்கு லேசென்சு பெற்ற வியாபாரிகள் வசமுள்ள சூபர்பைன், பைன், ரகமுள்ள வேஷ்டி, புடவை, மல், இவைகளின் சரியான கணக்குகளை தினசரி கீழேகண்ட நமூனுப்படி பதிந்து ஒரு "தினசரி ஸ்டாக் ரிஜிஸ்டர்" (தினசரி கையிருப்புக் கணக்கு) வைத்துக்கொள்ள வேண்டும்.

நமூனு 4-A.

.... ஜில்லா சில்லரை ஜவுளி வியாபாரி வைத்துக்கொள்ளும் தினசரி ஸ்டாக் ரிஜிஸ்டர்.

லேசென்சு நெ................ ரகம்

தேதி	இருப்பு கஜம்	வரவு கஜம்	மொத்த கஜம்	இன்வாய்ஸ் நெ. தேதி, பாரிடமிருந்து வாங்கியது	மொத்த பில் எண்ணிக்கை	மொத்தம் விற்றது கஜம்	பாக்கி கையிருப்பு கஜம்	ஷேரா
1	2	3	4	5	6	7	8	9
	S. F.	S. F.	S. F.			S. F.	S. F.	

S = சூபர்பைன்

F = பைன்

குறிப்பு: ஒவ்வொரு ரகத்திற்கும், ஒவ்வொரு தினுசுத் துணிக்கும் தனித்தனிப் பக்கங்களில் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும்.

நடுத்தர, மோட்டாத் துணிகளுக்கு தனி தினசரி ஸ்டாக் ரிஜிஸ்டர்

ஒவ்வொரு சில்லரை ஜவுளி வியாபாரியும் (மேலே கண்டபடி உயர்தர ரகங்களுக்கு வைத்துக்கொள்ளவேண்டிய ஸ்டாக் ரிஜிஸ்டரைத்தவிர) மற்ற ஜவுளிகளுக்கு அடியில் கண்ட நமூனுப்படி ஒரு தினசரி இருப்புக் கணக்கு "தினசரி ஸ்டாக் ரிஜிஸ்டர்" வைத்துக்கொள்ள வேண்டியது.

நமூனு 4-B.

.... ஜில்லா சில்லரை ஜவுளி வியாபாரி...........வைத்துக்கொள்ளும் தினசரி ஸ்டாக் ரிஜிஸ்டர்

லேசென்சு நெ................ ரகம்

தேதி	இருப்பு கஜம்	வரவு கஜம்	மொத்த கஜம்	இன்வாய்ஸ் நெ. தேதி, பாரிடமிருந்து வாங்கியது	மொத்த பில் எண்ணிக்கை	மொத்தம் விற்றது கஜம்	பாக்கி கையிருப்பு கஜம்	ஷேரா
1	2	3	4	5	6		8	9

குறிப்பு: நடுத்தர, மோட்டா வேஷ்டி, புடவை, மல் இவைகள் எல்லாவற்றையும் ஒரே பக்கத்தில் சேர்த்து எழுதிக்கொள்ளலாம்.

"பில்" புத்தகத்தில் மோட்டா, நடுத்தர ரகங்களை வாங்குபவர் பெயரும் விலாசமும் இனி வேண்டியதில்லை

சூபர்பைன், பைன் என்ற இரண்டு நைஸ் ரகங்களில் வேஷ்டி, புடவை, மல் இவைகளை வாங்குபவர் பெயரும் விலாசமும் மட்டில் ஜவுளிவியாபாரி கொடுக்கும் 'பில்'லில் கண்டிருந்தால் போதும். இதைத் தவிர நடுத்தர மோட்டா ரகங்களை வாங்குபவர் பெயரும், விலாசமும், காணவேண்டியதில்லை.

புதுவை நூல் "ஜவுளி நூல்"
விலை நிர்ணயம்.
முந்தின அறிக்கைக்குத் திருத்தம்

மாகாண ஜவுளி நூல் கமிஷனர் புதுவை நூல் விலை கட்டுப்பாடு சம்பந்தமாக 14-3-49ல் தான் விடுத்த அறிக்கைக்குக் கீழ்கண்ட திருத்தத்தை வெளியிட்டிருக்கிறார்:—

புதுவை நூல்விலை கட்டுப்பாடு சம்பந்தமாக 14-3-49ல் மாகாண ஜவுளி கமிஷனர் விடுத்த ஒரு அறிக்கையில் சில்லரை விலை மொத்த விலையில் 4.11/16 சதத்திற்கு அதிகமாகக் கூட்டி விற்கக்கூடாது என்று கண்டிருந்தது. இது சரியல்ல. அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி பம்பாய் ஜவுளி நூல் கமிஷனர் நிர்ணயித்துள்ள மில்வாசல் விலையில் 7.13/16 சதத்திற்கு அதிகமாகச் சில்லரை விலை இருக்கக்கூடாது.

சிமிண்ட்

மாகாண சிமிண்ட் விநியோகம்
"கௌரவ அதிகாரியின் அனுமதி தேவை"
விலை நிர்ணயம் சர்க்கார் அறிக்கை.

சென்னை, ஏப்ரல் 6—சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுவதாவது:

கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ள சாமான்கள் (கன்டிரோல்டு கமாடிட்டீஸ்) டைரக்டர் உத்தரவுகளின் கீழ் சென்னையிலும் கோயம்புத்தூரிலுமுள்ள கௌரவ சிமிண்ட் கட்டுப்பாடு அதிகாரிகள் இம்மாகாணத்தில் சிமிண்ட் விநியோகம் செய்து வருகின்றனர்.

கௌரவ சிமிண்ட் கட்டுப்பாடு அதிகாரி எழுத்து மூலமாக உத்தரவு கொடுத்திருந்தாலொழிய யாரும் சிமிண்ட் வியாபாரம் செய்யக்கூடாது; இதேமாதிரி பிரஸ்தாப அதிகாரியிடமிருந்து எழுத்து மூலமாக உத்தரவு பெற்றாலன்றி யாரும் சிமிண்ட் வாங்கவும் கூடாது.

சில்லரைச் செலவுகளுக்காக ஜனங்கள் சுலபமாக சிமிண்ட் வாங்கிக்கொள்வதன் பொருட்டு, சிமிண்ட் வியாபாரிகள் தங்கள் மாதக் கோட்டாவில் 30 சத விகிதம் வரை அனுமதிச் சீட்டுக்களில்லாமலே விற்பனை செய்யலாம். அதாவது உண்மையிலேயே சிமிண்ட் தேவைப்படுவோருக்கு தடவைக்கு 10 மூட்டைகள் வரை இவ்விதம் விற்கலாம். கிராமப் புனருத்தாரணம், உணவுப்பெருக்குத் திட்டம் இவைசம்பந்தமான அவசரமான சிறு வேலைகளுக்கு தாசில்தார்கள் அல்லது டெபுடி-தாசில்தார்கள் (தடவைக்கு 20 மூட்டைகள் வரை) வழங்கும் அனுமதிச் சீட்டுகளின் பேரில் கொடுப்பதற்காக மற்றொரு 30 சத வீதம் வியாபாரிகள் ஒதுக்கிக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. கிராமாந்திரப் பகுதிகளிலுள்ள மக்கள் எவ்வித சிரமமுமின்றித் தங்கள் நாணயமான சிமிண்ட் தேவையைப் பூர்த்திசெய்து கொள்ளவே மேலே கூறப்பட்டுள்ள ஏற்பாடு.

யாருக்கு மனுப் போடவேண்டும்?

சிமிண்ட் வேண்டுவதற்கான காரணத்துடன் சிமிண்ட் தேவைப்படுவோரெல்லாம் சம்பந்தப்பட்ட கௌரவ சிமிண்ட் கட்டுப்பாடு அதிகாரிக்கு மனுச்செய்து கொள்ளலாம். ஜில்லா அதிகாரிகள் மூலம் இம்மனுக்கள் அனுப்பப்படுமானால் உசிதம். கௌரவக் கட்டுப்பாடு அதிகாரி மனுக்களை சிபார்சு செய்து அனுமதிச்சீட்டுகள் வழங்குவதற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்பி வைப்பார். கல்வி ஸ்தாபனங்கள சம்பந்தமான சிமிண்ட் தேவைகளுக்கான மனுக்கள் கல்வி இலாகா டைரக்டர் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

இம்மாகாணத்தில் அன்னிய நாட்டு சிமிண்ட் விற்பனைசெய்யப் படுவதற்கும் சர்க்கார் அனுமதித்துள்ளனர். நாட்டு சிமிண்ட் வியாபாரிகள் யாருக்கும் இறக்குமதியாகும் அன்னிய சிமிண்ட் கொடுக்கப்படமாட்டாது. 10 மூட்டைகள் வரை அன்னிய சிமிண்ட் வாங்கஅனுமதிச் சீட்டுகள் தேவையில்லை. சினிமா தியேட்டர்கள்

சம்பந்தமான கட்டுமானங்களுக்கெல்லாம் அன்னிய சிமிண்ட் அனுமதிக்கப்படுகிறது.

இந்த சர்க்கார் அறிவித்துள்ளபடி நாட்டு சிமிண்ட் விலை டன் ரூ. 82-8-0 வீதம் வாகன் 'லோடு' களாக ரயில் கட்டணமில்லாமல் குறித்த இடத்தில் சப்ளை செய்யப்படவேண்டும். பாகிஸ்தான் நீங்கலாக இதர நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிமிண்ட் கிடங்கு வாசலில் (இறக்குமதி வரி ரூ.16-8-0 உட்பட) டன்விலை ரூ.157-8-0. பாகிஸ்தான் சிமிண்ட் கிடங்கு வாசல் விலை ரூ. 144. அனுமதியின்றி சிமிண்ட் வாங்குவதோ, விற்பதோ அல்லது கட்டுப்பாடு விலைகளுக்குமேல் விலைவைத்து விற்பதோ சட்டப்படி குற்றமாகும்.

சிமிண்ட் வியாபாரிகளாக நினைப்போர் சம்பந்தப்பட்ட சிமிண்ட் கம்பெனிகளுக்கு மனுச் செய்துகொண்டால் அவர்கள் தேவையான நடவடிக்கை எடுத்துக் கொள்வர்.

விற்பனைவரி விலக்கு

ஒரு எண்ணெய் செக்கு வைத்திருப்பவருக்கு விற்பனைவரி கிடையாது.

ஒரே ஒரு எண்ணெய் செக்கு வைத்திருக்கும் வியாபாரிக்கு 1949 எப்ரல் 1உ யிலிருந்து விற்பனை வரி இன்னும் ஒரு வருஷத்திற்கு செலுத்த வேண்டியதில்லை. ஆனால் அவர் இதற்கென்று குறிப்பிட்ட பாரத்தின் மூலம் மனுச் செய்துகொண்டு ரூ. 6 கட்டணம்செலுத்தி ஒரு லைசென்ஸ் பெற்றவராக இருக்கவேண்டும். சர்க்கார் அவர்களுக்கு விதிவிலக்கு அளித்திருக்கின்றனர்.

ஷாப் சட்டம்-அறிக்கை

ஷாப் சட்டம் சிலகடைகள் வாரம் ஒரு தினம் மூடவேண்டியதில்லை

ஷாப்ச்சட்டத்தின் 11 (i) செக்ஷன்படி ஒவ்வொரு கடையும் வாரத்தில் ஒரு நாள் கட்டாயமாக மூடி இருக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் எந்தெந்தவகை கடைகள் அப்படி மூட வேண்டியதில்லை என்று விதிவிலக்குசெய்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அதை அனுசரித்து இப்போது (1) பழங்கள் (2) வெத்திலை (3) வாழைஇலை (4) முட்டை இவைகளிலேயே முக்கியமாய் வியாபாரம் செய்யும் கடைகள் இந்த சமான்களின் விற்பனை சம்பந்தப்பட்டமட்டில் கடைகளை வாரம் ஒருநாள் மூடவேண்டியதில்லை என்று சர்க்கார் உத்திரவு செய்திருக்கிறார்கள். (ஆனால் அதில் வேலைசெய்யும் சிப்பந்திகளுக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை உண்டு.)

(12-4-49 சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 460)

இறக்குமதி

சைக்கிள் இறக்குமதி வரி
150 சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது

இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் சைக்கிள்கள், சைக்கிள் சாமான்கள் இவற்றின் மீது விலைகளைப் பொறுத்து (இங்கிலாந்தில் செய்யப்படுவனவற்றிற்கு) 24 சதவிகிதமும், (இதர தேசங்களில் உற்பத்தி செய்யப்படுவனவற்றிற்கு) 36 சத விகிதமும் அதிகமாக வரி விதிக்க இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். இதன்பிரகாரம் முறையே 60 சத விகிதமும் 70 சத விகிதமும் வரி விதிக்கப்படும்.

காப்புவரி போர்டின் சிபார்சை அனுசரித்து இவ்விதம் முடிவு செய்திருக்கிறார்கள்.

இந்திய சைக்கிள் உற்பத்திக்கு அளிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு 31-3-49-ந்தேதியோடு முடிவடைந்து விட்டது. ஆகவே மேற்கொண்டு மூன்று வருஷங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

விசை உற்பத்தி கருவிகள் இறக்குமதி
எல்லா ரகங்களும் பொது லைசென்ஸ் பேரில் இருக்கும்

சுலபமான நாணயமாற்ற செலவாணிகள் உள்ள நாடுகளிலிருந்து எல்லா ரக மோட்

டார்கள், ஜெனரேடர்கள் (விசை உற்பத்தி கருவிகள்) போன்ற பண்டங்கள் இறக்குமதியை பொது லைசென்ஸ் கீழ் கொண்டுவர இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

இதுவரை இப்பண்டங்களின் சில ரகங்கள்தான் பொது லைசென்ஸ் கீழ் இருந்தன. இதனால் ஏற்படும் சிக்கல்களை தடுப்பதற்காகவே இப்பொழுது இம்மாதிரி எல்லா ரக பண்டங்களையும் பொது லைசென்ஸ் கீழ் கொண்டுவர முடிவு செய்திருப்பதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

ஸ்டாம்பு

முனிசிபாலிடிகளில் சாசன ஸ்டாம்பு 100-க்கு ரூ. 8 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது

1—4—49 முதல் எல்லைக்குட்பட்ட சொத்தைப் பொருத்து ஏற்படும் கிரயம், தான சாசனம், போக்கியம் (ஒத்தி) இவைகளுக்கு முனிசிபல் ஆக்ட் 78 A செக்ஷன்படி ஸ்டாம்பு கட்டணம் ரூ. 4-ல் இருந்து ரூ. 5-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது ஸ்டாம்பு ஆக்ட் பிரகாரம் 100-க்கு ரூ. 3-ம் சேர்த்து முனிசிபல் சொத்துக்களுக்கு ரூ. 100-க்கு ரூ. 8 ஸ்டாம்பு வேண்டும்.

புதுக்கோட்டை ஸ்டாம்புகள்

1—4—1949 முதல் செலாவணி இல்லாத புதுக்கோட்டை ஜுடிஷியல் ஸ்டாம்புகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் அவைகளை கொடுத்து இந்திய யூனியனின் ஸ்டாம்புகளாக 31—5—1949 வரை மாற்றிக் கொள்ளலாம்.

(19-4-1949 சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 345)

கிராம உத்தியோகஸ்தர்களும் மேலதிகாரிகளும்

கிராமத்தை விட்டு வரும்படி அனாவசிய 'சம்மன்' கூடாது

கிராம உத்தியோகஸ்தர்களைத் தகுந்த காரணமின்றி மேலதிகாரிகள் அனாவசியமாகத் தங்களை வந்து சந்திக்கும்படி சம்மன் செய்யக்கூடாது என்று நிரந்தர உத்திரவு இருந்தவந்தும்கூட, கிராம அதிகாரிகள் தகுந்த காரணமின்றி ஆஜராகும்படி சம்மன்கள் அனுப்பப்பட்டு வருவதாகச் சர்க்காருக்கு தெரியவருகிறது. தாசில்தாரோ, அல்லது டெபுடி தாசில்தாரோ, அன்றி அதற்கு மேற்பட்ட அந்தஸ்துள்ள ரெவினியூ அதிகாரியோ, சுற்றுப்பிரயாணம் செய்யும்போது, தாங்கள் 'கேம்ப்' செய்யும் இடத்துக்கு 5 மைல் சுற்று வட்டாரத்திற்குள் இருக்கும் கிராமாதிகாரிகளை கொள் முதல், கிணறு வெட்டும் திட்ட முன்னேற்றம், சிறு நீர்ப்பாசன வேலைகளின் அபிவிருத்தி ஆகிய விஷயங்கள் பற்றி கிராமாதிகாரிடமிருந்து தகவல்கள் தெரிந்துகொள்ளவும், அவைபற்றி சர்க்காரின் உத்தரவுகள் கொள்கைகள் பற்றி அறிவிக்கவும் ஆஜராகும்படி உத்திரவிடுவதற்கு எவ்விதமான ஆட்சேபனையும் கிடையாது. இருந்தபோதிலும், கிராமாதிகாரிகளைச் சாதாரணமாக அவர்களின் கிராமத்திலிருந்து ஐந்து மைல்களுக்கப்பாலுள்ள இடங்களுக்கு ஆஜராகும்படி மேலதிகாரிகள் உத்திரவிடக்கூடாதென்றே சர்க்கார் கருதுகின்றனர்.

எனவே, இனிமேல் தாசில்தாரோ, டெபுடி தாசில்தாரோ அவருக்கடுத்த அந்தஸ்துள்ள இதர அதிகாரியோ கிராமாதிகாரிகளை நேரில் ஆஜராகும்படி சம்மன் பிறப்பித்தால், அதுபற்றிய ஒரு ரிஜிஸ்டர் வைத்துக்கொள்ள வேண்டும். அதில் எந்த கிராமத்துக்குக் கிராமாதிகாரி வரும்படி உத்தரவு செய்யப்பட்டார், அக் கிராமத்துக்கும் அவரது கிராமத்துக்கும் எவ்வளவு தூரம், என்ன காரணத்திற்காக வரவழைக்கப்பட்டார் என்பனபோன்ற விவரங்கள் பதியப்படவேண்டும். அதேபோல், ரெவினியூ இன்ஸ்பெக்டரும் கிராமாதிகாரிகளை நேரில் ஆஜராகும்படி அனுப்பும் தாக்கீதுகள் பற்றிய ரிஜிஸ்டர் வைக்கவேண்டும். இந்த ரிஜிஸ்டர்களை உயர்தர அதிகாரிகள் அடிக்கடி பரிசீலனை செய்யவேண்டும். இந்த உத்தரவுகள் ஒழுங்காகவும், சரிவரவும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றனவா வென்று கண்காணிக்க வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

(15-3-1949 சென்னைச் செய்தி)

97685

Printed by Dr. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam.
Edited and Published by M. R. RAJAGOPALAN at No. 48 Kalyanaraman Street, Kumbakonam.

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர், காஞ்சிவரம், கும்பகோணம்

பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். தேவைக்கு உடனே முந்துங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி,

கெருடலாயத் தெரு, : : கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மே. மே. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
ஜரிகை பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்.

கிளை : 20, லெக்ஷ்மிபுரம் 2-வது தெரு, மதுரை.

Regd. No. M. 5399

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAY 1949
MADRAS

(பிராஞ்சுகள்: மதராஸ் & மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்,
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.